SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ் 1-15 ஏப்ரல் 2026 ₹25
Volume : 46 Issue : 20 www.samarasam.net



சாகித்ய அகாடமி
விருது வரலாற்றில்
**தடம் பதித்த
தமிழ்ச் செல்வன்**

அமெரிக்க - இஸ்ரேல் - ஈரான்
**போரும், தீர்வும்**

சமகால இஸ்லாமிய அறிஞர்
**சையத் முஹம்மத்
நகீப் அல் அத்தாஸ்**
இறைவனிடம் மீண்டார்



# இஸ்லாமும் அரசியலும்

'இஸ்லாத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தமே இல்லை!' என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் உண்மை அவ்வாறில்லை. இஸ்லாத்துக்கும் அரசியலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இஸ்லாம் என்றாலே ஓர் அரசியல் நெறிதான் என்று கூடச் சொல்லலாம். இஸ்லாம் கூறும் அரசியல் குறித்த ஓர் ஆழமான பார்வை.

TRADITIONAL TRUST SINCE 1925

LKS

100 YEARS

யார் அமானிதத்தை பேணவில்லையோ
அவருக்கு ஈமான் இல்லை.
யார் சத்தியத்தை கடைப்பிடிக்கவில்லையோ
அவருக்கு மார்க்கம் இல்லை.

– முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்


கதீட்ரல் ரோடு

L.K.S.

கோல்டு பேரடைஸ்

35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611



## உள்ளே...


**7** இந்தியாவின் தார்மிகக் குரல் மீண்டெழ வேண்டும் - தலையங்கம்

**8** இஸ்லாமும் அரசியலும் - மௌலவி M.M. முஹம்மத் இஸ்மாயீல் இம்தாதி

**12** சமகால இஸ்லாமிய அறிஞர் சையத் முஹம்மத் நகீப் அல் அத்தாஸ் - இறைவனிடம் மீண்டார்

**16** அமெரிக்க - இஸ்ரேல் - ஈரான் போரும், தீர்வும் - டாக்டர் K.V.S. ஹபீப் முஹம்மத்

**22** சாகித்ய அகாடமி விருது வரலாற்றில் தடம் பதித்த தமிழ்ச் செல்வன் - சேயன் இப்ராகிம்

**24** அவனின்றேல் நீ இல்லை! - அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

**30** என் இனிய இளைஞர்களே..! - அப்துர் ரவூஃப் காலித்

**34** கவிதை: பெருநிலத்தின் கதையாடல் - ஏ.நஸ்புள்ளாஹ்

**36** நபிகள் நாயகம்(ஸல்) போதிக்கும் விலங்கு வளர்ப்பு - ச.அக்ஷயா

**38** சிறுகதை: நேர்ச்சை - ஆர்னிகா நாசர்

**42** அரபுப் பெண்களின் உடை - நஸ்ரத் ரோஸி

**50** என்ன வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் - டி. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

• கடிதங்கள் • திருக்குர்ஆன் விரிவுரை • நபிமொழி விளக்கம் • புதிர் போட்டி • சிறார் உலகம்



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
• 044-2662 0091
• samarasam.article@gmail.com
• www.samarasam.net



## காலத்தின் கட்டாயம்

மௌளலானா அபுல் கலாம் ஆசாத் கூறுவதைப் போல, முஸ்லிம் சமுதாயம் குர்ஆன் கட்டளைப்படி, ஜகாத் என்னும் ஏழை வரியை நிறைவேற்றினாலே அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வு தானாகவே ஏற்பட்டு விடும் என்பது சத்தியமான வார்த்தைகள். ஆனால் நடைமுறையில் அவ்வாறு இல்லையே! ஜகாத் திட்டத்தின் அடிப்படையை விளங்காதவர்களாக ஜகாத் கொடுத்து வரும் நிலைமையை முதலில் மாற்றியமைக்காத வரையில் அப்துர் ரகீப் அவர்கள் வலியுறுத்தும் 10 அம்சத் திட்டங்களை நிறைவேற்றுவது சிரமமான விஷயமாகும்.

மதரஸா பாடத்திட்டத்தில் ஜகாத் பற்றிய பாடங்கள் சேர்க்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆலிம் பெருமக்கள் மாணவ மாணவிகளுக்கும் பொது மக்களுக்கும் விளக்கமாகப் பதிய வைக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. 80 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் அது குறித்த புரிதல் இல்லாமல் ஜகாத் விநியோகத்தை முடித்து விடுகிறார்கள்.

சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு மிகத் தேவையான ஜகாத் கணிப்பான் செயலியை தயாரித்தமைக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

**- S.A. சபீர் அஹ்மது,<br>ஆணைக்காரன்சத்திரம்**

## அழகிய விளக்கம்

ரமளான் என்றாலே முஸ்லிம்கள் பகலில் உணவு அருந்த மாட்டார்கள் என்று தான் பொதுவாக நாம் அறிந்து இருக்கிறோம். ஆனால் நோன்பும் பெருநாளும் கட்டுரை மூலம், 'நோன்பு ஏன்? ஸஹர் என்றால் என்ன? தராவீஹ் தொழுகை, குர்ஆனுக்கும் நோன்பிற்கும் என்ன தொடர்பு, ஜகாத்தும் நோன்பும், இஃப்தார், நோன்புப் பெருநாள் எனப் பல தகவல்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டோம். இறைவனுக்கு அஞ்சி நோன்பு நோற்கும் இஸ்லாமியச் சகோதரர்களைப் பாராட்டுகிறேன்.

**- M. ராதாகிருஷ்ணன், அஞ்சல் துறை (ஓய்வு),<br>வளையாம்பட்டு**

## அவர்களுக்கு அழகல்ல

நோன்பும் பெருநாளும் கட்டுரை நோன்பு, ரமளான் பெருநாள் சிறப்பு குறித்து இஸ்லாமியர் அல்லாத பிறமத சகோதர, சகோதரிகளுக்கு விளக்குவதாக அமைந்திருந்தது சிறப்பு. 'நாடாளுமன்றத்தின் மாண்பைக் குலைக்கும் பாஜக' கட்டுரை சிறப்பு.

பொதுவாக அவையில் இல்லாதவர்களைப் பற்றி எதிர்மறையாகவும் இழிவாகவும் பேசுவது சபை நாகரிகமல்ல. அதிலும் குறிப்பாக மறைந்த ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்கள் அவர்களின் தரப்பு வாதத்தை வைக்க முடியாது என்பது தெரிந்தும் அவர்களைப் பற்றி அவையில் தரக்குறைவாகப் பேசுவது பக்குவப்பட்ட அரசியல்வாதிகளுக்கு அழகல்ல.

**- இரா. சாந்தகுமார், கூடுவாஞ்சேரி**

## தோலுரித்துக் காட்டிய தலையங்கம்

நோன்புப் பெருநாள் சிறப்பிதழ் அதிகப் பக்கங்களுடன் சிறப்பாக வெளிவந்திருக்கிறது. செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் ரோபோடாக் இயந்திர நாயை சீனாவிலிருந்து வாங்கி வந்து தாங்கள் தயாரித்ததாகச் சொன்ன இழிவான நிலையை இந்தியாவின் அவமானம்

எனத் தலையங்கம் தோலுரித்துக் காட்டியது பாராட்டத்தக்கது.

**- ஜே. மஃரூப், குலசேகரன்பட்டினம்**

## விரிவான பார்வை

இந்துக்கள் விரதம் இருப்பதுபோல், கிறித்தவர்கள் நோன்பு இருப்பதுபோல் இஸ்லாமியர்கள் ஒருமாதம் முழுவதும் நோன்பிருப்பார்கள் என்று விளங்கி வைத் திருக்கின்றோம். நோன்பும், பெருநாளும் குறித்த விரிவான செய்தியை வழங்கி பல புரிதல்களை ஏற்படுத்தியிருக்கின்றீர்கள். மது, போதை, வட்டி, இலஞ்சம் என்ற தீமைகள் பெருகி விட்ட காலத்தில் மனித குலத்திற்கு பயிற்சி வழங்குவது அவசிய மானது. எல்லாரும் வாசிக்க வேண்டிய கட்டுரை.

**- இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்**

## தயக்கம் போக்கும் கட்டுரை

இஸ்லாம் குறித்து கேட்பதற்கும், சொல்வதற்கும் நமக்குள்ள தயக்கத்தைப் போக்கி உரையாட வேண்டிய தேவையை கேட்கப்படாத கேள்விகளும் சொல்லப்படாத பதில்களும் கட்டுரை எடுத்துரைத்தது. ஜகாத் குறித்த விழிப்பு உணர்வு ஒவ்வொரு மஹல் லாவிலும் நடைபெற வேண்டும். கொடை என்பது பணம் மட்டுமல்ல என்பதை விரி வாக எடுத்துரைத்த சாந்த் உஸ்மானிக்கு பாராட்டுகள்.

**- S. மகுதனன், M. லைலாம்மா, S. அஜிதா, தேனி**

## அவலங்களே பாஜக ஆட்சியின் காட்சி

நோன்புப் பெருநாள் சிறப்பிதழ் அட்டைப்படமே நோன்பின் மகத்துவத்தை உணர்த்தியது. கேட்கப்படாத கேள்விகளும் சொல்லப்படாத பதில்களும் பலதரப்பட்ட மக்களுக்கும் சிறப்பான விளக்கமாக அமைந்தது. பாஜக ஆட்சியில் AI உச்சி மாநாடு மட்டுமா அவமானம் இந்தியாவில் நடக்கக்கூடிய பல நிகழ்வுகளும் அவமான மாகவே இருக்கிறது. ரமளான் உருவாக்கு கின்ற மூன்று முத்தான பண்புகள் தேவை யான தொகுப்பு. ரமளானின் கவிதைகள் தத்ரூபமான வார்த்தைகள்.

**- ஐ. சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்**

## எந்தச் சட்டத்தின் கீழ் வரும்?

நாடாளுமன்றத்தின் மாண்பைக் குலைக் கும் பாஜக கட்டுரையில் சேயன் இப்ராகிம் தெளிவான விளக்கம் அளித்துள்ளார். நாடாளுமன்ற எதிர் வரிசையில் பாஜக அமர்ந்திருந்த போது செய்த அராஜகங்களும் மறக்கக் கூடியதல்ல. நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அளிக்க வேண்டிய சபாநாயகரே பிரதமருக்கு நாடாளுமன்றத்தில் பாதுகாப் பில்லை எனக் கூறி பேசவிடாமல் பாதுகாத் திருக்கின்றார். இது எந்தச் சட்டத்தின் கீழ் வருமோ?

**- N. பாபு அருள் ஜோஷி, களக்காடு**

## அவசியமான யோசனை

பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சிகள் ஒவ்வொரு மஸ்ஜித்தோறும் சகோதர சமுதாய மக்களுடன் நடத்துதல் நல்ல யோசனை. இஸ்லாமிய சமுதாயம் இதில் கவனம் செலுத்துவது மிக மிக அவசியம்.

நிலையான வளர்ச்சியில் இலக்குகளை அடையும் ஆற்றல் இஸ்லாம் வகுத்த ஜகாத் திட்டத்துக்கு உள்ளது என ஐ.நா பெரு மன்றமே அங்கீகரித்தது சாதாரண விஷய மல்ல என்பது அப்துர் ரகீப் அவர் களின் கட்டுரையை வாசித்தவுடன் விளங் கியது.

இந்தியா நடத்திய உலக AI உச்சி மாநாடு அவமானத்தைத் தேடித் தந்து விட்டது என் கிற செய்தி அதிர்ச்சியளித்தது.

**- ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்**


ஹிதாயா மகளிர் இஸ்லாமியக் கல்லூரி
Hidhaaya Islamic College for Girls
3 YEARS AALIMAH COURSE
SYLLABUS FOR AALIMAH
Arabic Language & Grammar
Seerah & Fiqh
Aqeedah & Hadith
Tajweed & Tafseer
Tilawat & Usul
Tarbiyyah & Dawatul Islami
Admission Open for 2026 – 2027
10 & +2 through NIOS.
Certificate in Computer Application.
Certificate in Early Childhood Development.
Contact Number : 73050 40389 | www.hidhaayacollege.com | 53/26, 2nd Floor, Vepery High Rd, Periamet,
Chennai, Tamil Nadu 600 003

சரம் : 46
மலர் : 20

وَقُولُوا۟ قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 ஷவ்வால் 12 - 26 ● 2026 ஏப்ரல் 1-15

# இந்தியாவின் தார்மிகக் குரல் மீண்டெழ வேண்டும்

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதல் தொடுத்ததைத் தொடர்ந்து போர் உச்சத்தைத் தொட்டு நிற்கிறது. ஈரானின் பதிலடியால் அமெரிக்காவும் இஸ்ரேலும் கதிகலங்கிப் போய் உள்ளன. இது மூன்று நாடுகள் தொடர்புடைய விஷயம் அல்ல. இந்தப் போரின் தாக்கமும், பாதிப்பும் உலகையை உலுக்கியிருக்கின்றது. போர் முடிவுக்கு வர வேண்டும். இன்னும் இந்தப் போர் நீடித்தால் பெரும் இழப்பை உலகம் சந்திக்க நேரிடும்.

உலக நாடுகள் அமெரிக்க, இஸ்ரேலின் வல்லாதிக்கத்தையும், அத்துமீறலையும் எதிர்த்து பெருங்குரல் எழுப்ப வேண்டும். போர் நிறுத்தத்தில் பெரும் பங்கு வகிக்க வேண்டிய இந்தியா தடுமாறிக் கொண்டிருப்பது சர்வதேச அரங்கில் இந்தியாவிற்கு அவப்பெயரைத் தேடித் தந்திருப்பதுடன், பாரம்பரியமிக்க இந்திய நீதி மிகப்பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது.

பள்ளிக்கூட மாணவர்கள் 165 பேர் உள்பட ஈரானின் உயர் தலைவர் ஆயத்துல்லாஹ் கமேனி கொல்லப்பட்டதற்கு இந்தியா கண்டனம் தெரிவிக்கவில்லை. பிரதமரும், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரும் வாய்மூடி இருக்க ஐந்து நாள் மௌனத்திற்குப் பிறகு இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி இரங்கல் செய்தியைப் பதிவு செய்துள்ளார்.

ஃபலஸ்தீன் மீதான இஸ்ரேலின் நடவடிக்கைகள், போர்க்குற்றங்கள் மனித குலத்திற்கு எதிரானவை, இவை இனப்படுகொலை என சர்வதேச மனித உரிமை அமைப்புகள், ஐநா மன்றம் அறிவித்துள்ள சூழலில் தெளிவான துணிச்சலான அறிக்கை விடுவதற்குப் பதிலாக இந்திய பிரதமர் இஸ்ரேல் பயணம் மேற்கொண்டு ஃபாதர் லேண்ட் என்று புகழாரம் சூட்டி சர்வதேச போர்க் குற்றவாளியான நெதன்யாகுவைக் கட்டித் தழுவியது இந்திய மக்களின் மனச்சான்றுக்கு எதிரானது. இந்திய பிரதமரின் இஸ்ரேலிய நெருக்கம் குளோபல் சவுத்(Global south) நாடுகளின் கொள்கை ரீதியான குரலாகத் திகழும் இந்தியாவின் நம்பகத் தன்மையைப் பலவீனப்படுத்தியுள்ளது.

இந்தியா வரலாற்று ரீதியாக நிறவெறி, காலனித்துவ ஆக்கிரமிப்பு, இனப்பாகுபாடுகளை எதிர்த்து வந்துள்ளது. சர்வதேச அரங்கில் இந்தியா தார்மிக அந்தஸ்துடன் மட்டுமல்ல நீதி, கருணை, பாதிக்கப்பட்டவர்களுடன் நிற்றல் போன்ற விழுமியங்களைக் கொண்டது. இந்தியாவின் உண்மையான பலம் அதன் பொருளாதார, பாதுகாப்புச் சக்தியில் மட்டும் இல்லை அதன் தார்மிகக் குரலில்(Moral voice) உள்ளது.

ஃபலஸ்தீன நிலங்களை இஸ்ரேல் அபகரித்திருப்பதும், ஆக்கிரமித்திருப்பதும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளால் நிறவெறி(Apartheid) என்று விவரிக்கப்பட்டுள்ளது. தொடக்க காலம் முதல் காந்தி, நேரு உள்ளிட்ட தலைவர்கள் ஃபலஸ்தீனின் பக்கமே நின்றிருக்கின்றார்கள். 1950 வரை இஸ்ரேலை ஒரு நாடாகவே இந்தியா அங்கீகரிக்கவில்லை.

ஃபலஸ்தீனை மையப்படுத்தி நடைபெறும் ஈரான் மீதான தாக்குதலில் நீதியின் பக்கம் நிற்க வேண்டிய இந்தியா அமைதி காப்பது தவறானது. அணிசேராக் கொள்கை(Non-Alignment Policy), பஞ்சசீலக் கொள்கையிலிருந்து விலகி அமெரிக்காவிற்கு அஞ்சி நிற்பது சர்வதேச அரங்கில் இந்தியா காலம் காலமாகக் கடைப்பிடித்து வந்த நீதி, துணிச்சல் மிக்க மாண்புகளுக்கு எதிரானது.

யாரிடம் எத்தனை நாள்களுக்கு எண்ணெய் வாங்குவது, இந்தியா பாகிஸ்தான் போர் நிறுத்த அறிவிப்பு போன்ற இந்தியாவின் முடிவுகளை அமெரிக்க வெள்ளை மாளிகை அறிவிக்கும் அவல நிலைக்கு இன்றைய ஆட்சியாளர்கள் இந்தியாவைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றார்கள்.

இந்தியா தனது நீதிமிக்க ராஜபாட்டைக்குத் திரும்ப வேண்டும். உலகத் தலைமை (விஷ்வ குரு) என்ற வெற்று முழக்கத்தினால் மட்டுமே இவை எதையும் சாதித்து விட முடியாது.




# இஸ்லாமும் அரசியலும்

– மௌலவி. M.M.**முஹம்மத் இஸ்மாயீல்** இம்தாதி

**‘இஸ்லாத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தமே இல்லை.!’ என்று பலர் நினைத்துக் கொண் டிருக்கின்றார்கள். நினைத்துக் கொண்டிருப்பதென்ன; சிலர் அப்படியே பேசிக் கொண்டும் இருக்கின்றார்கள். பேசிக்கொண்டிருப்பதென்ன; சிலர் பரப்புரை கூடச் செய்து கொண்டிருக் கின்றார்கள். ஆனால் உண்மை அவ்வாறில்லை. இஸ்லாத்துக்கும் அரசியலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இன்னும் சரியாகச் சொல்வதானால் இஸ்லாம் என்றாலே ஓர் அரசியல் நெறிதான் என்று கூடச் சொல்லலாம். இது குறித்து ஏராளமான இறை வசனங்கள், நபிமொழிகள் உள்ளன. அவற்றில் ஒன்றிரண்டை கூர்ந்து சிந்தனை செய்தால் இந்த உண்மையை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.**

அல்லாஹ் படைத்துள்ள இந்த பூமியில் அநீதி அக்கிரமங்கள் முற்றிலும் ஒழிக்கப்பட்டு நீதி தழைத்தோங்க வேண்டும். இதுதான் இஸ்லாத்தின் கொள்கை! நீதியை நிலை நாட்ட வேண்டும் என்கிற அதன் கொள்கைகளை நிலை நாட்டுவதற்காகத்தான் அல்லாஹ் இந்த உலகத்துக்கு நபிமார்களை அனுப்பி வைத்தான் என்று அவனே கூறுகிறான்:

‘நாம் நம் தூதர்களைத் தெளிவான சான்றுகளுடனும், வழிகாட்டுதல்களுடனும் அனுப்பி னோம்; மேலும், அத்துடன் அவர்களுக்கு வேதத்தையும், துலாக்கோலையும் இறக்கினோம். மக்கள் நீதியில் நிலைத்திருக்கும் பொருட்டு!’ (திருக்குர்ஆன் 57:25)

இந்த வசனத்தில் நபிமார்களின் பணிகளில் ஒன்றாக, ‘மக்கள் நீதியில் நிலைத் திருக்க வேண்டும் என்பதற்காக’ என்று கூறப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் நீதியில் நிலைத் திருப்பதற்கு என்று சொல்லப்படவில்லை. உண்மையில் இந்த உலகத்தில் எத்தகைய நீதியான அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணி அல்லாஹ் தன்னுடைய தூதர்களை அனுப்பி வைத்தானோ அந்த நீதியான சூழ்நிலை என்பது அரசியல் அதிகாரத்தினால் மட்டுமே சாத்தியமாகும். மட்டுமல்ல; அரசியல் மாற்றங்கள் அல்லாஹ்வின் நியதிகளில் ஒன்று.

பூமியில் ஆக்கப் பணிகள் நடைபெற வேண்டும் என்பதைத்தான் இறைவன் விரும்பு கின்றான். ஆக்கப் பணிகளை மேற்கொள்ளும் தகுதியில் யார் இருக்கின்றார்களோ அவர்களிடம் பூமியை அல்லது அதன் ஒரு பகுதியை ஆளும் பொறுப்பை வழங்கு கின்றான். ஆட்சிப் பொறுப்பு வழங்கப்பட்டவர்களிடம் ஆக்கப்பணிகள் குறைந்து போய் அழிவுப் பணிகள் அதிகமாகி விட்டால் அவர்களிடமிருந்து ஆட்சி பிடுங்கப்பட்டு அடுத்த வர்களிடம் வழங்கப்பட்டு விடும். இதுதான் இறைவனின் நியதி!

இதனைத்தான் அல்லாஹ் திருக்குர்ஆனில், ‘இவ்வாறு மனிதர்களில் ஒரு கூட் டத்தை பிறிதொரு கூட்டத்தைக்கொண்டு அல்லாஹ் தடுக்கா விட்டால், இந்த பூமியே

குழப்பத்தால் சீர்குலைந்து போயிருக்கும். எனினும், அல்லாஹ் உலகோர் மீது பேரருள் புரிபவனாகவே இருக்கின்றான். (அவனே இவ்வாறு சீர்கேடுகளை அகற்றுகின்ற ஏற்பாடுகளைச் செய்து கொண்டே இருக்கின்றான்.)' (திருக்குர்ஆன் 2:251)

'(நபியே) நீர் கூறுவீராக! 'அல்லாஹ்வே! ஆட்சியதிகாரம் அனைத்துக்கும் அதிபதியே! நீ நாடுகின்றவர்களுக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய், மேலும், நீ நாடுகின்றவர்களிடமிருந்து ஆட்சியைப் பறிக்கின்றாய். நீ நாடுகின்றவர்களுக்கு கண்ணியத்தை வழங்குகின்றாய். மேலும், நீ நாடுகின்றவர்களை இழிவுபடுத்துகின்றாய். நன்மைகள் அனைத்தும் உனது கைவசமே உள்ளன. திண்ணமாக, நீ ஒவ்வொன்றின் மீதும் பேராற்றல் கொண்டவன்' (திருக்குர்ஆன் 3:26)

பெரும்பாலான சமூகத் தீமைகள் தீய அரசுகளால்தான் நடக்கிறது. எனவே, அரசியல் மாற்றங்களும் தேவையாக இருக்கிறது. திருக்குர்ஆன் கூறுகிறது: 'அவனுக்கு அதிகாரம் கிடைத்து விட்டால், அவனுடைய முயற்சிகள் எல்லாம் பூமியில் குழப்பத்தைப் பரப்புவதற்காகவும் வேளாண்மையையும், மனித இனத்தையும் அழிப்பதற்காகவுமே இருக்கும்! ஆனால் (அவன் சாட்சியாக்குகின்ற) அல்லாஹ் குழப்பத்தை விரும்புவதில்லை' (திருக்குர்ஆன் 2:205)

இங்கே தீயவர்களின் ஆட்சி அதிகாரத்தின் மூலம் ஏற்படும் மூன்று முக்கியமான எதிர் விளைவுகளைப்பற்றி குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. 1.பூமியில் குழப்பம் விளைவித்தல். 2.வேளாண்மையை அழித்தல். 3.மனித இனத்தை அழித்தல்.

### ஆட்சியும் அதிகாரமும் சோதனையும் கூட!

'மூஸா, தம் மக்களை நோக்கிக் கூறினார்: 'அல்லாஹ்விடம் உதவி கோருங்கள்; மேலும், பொறுமையை மேற்கொள்ளுங்கள்! திண்ணமாக, இந்த பூமி அல்லாஹ்வுக்குரியது. தன் அடிமைகளில் தான் நாடுவோரை அதற்கு அவன் உரிமையாக்குகின்றான். இன்னும் அவனுக்கு அஞ்சிய வண்ணம் வாழ்பவர்களுக்கே இறுதி வெற்றி இருக்கிறது. அதற்கு மூஸாவின் சமுதாயத்தார் கூறினார்கள்: நீங்கள் எங்களிடம் வருவதற்கு முன்னரும் நாங்கள் துன்பத்திற்குள்ளாக்கப்பட்டோம். இப்போது, நீர் எங்களிடம் வந்த பிறகும் (துன்புறுத்தப்பட்டு வருகிறோம்.) அதற்கு மூஸா பதிலளித்தார்: 'உங்கள் இறைவன் உங்களுடைய பகைவர்களை அழித்து விட்டு, இப்பூமியில் உங்களைப் பிரதிநிதிகளாக்கி நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள் என்பதைப் பார்க்கும் காலம் நெருங்கி விட்டது' (திருக்குர்ஆன் 7:128,129)

எனவே முஸ்லிம்களின் நிலைப்பாடு எப்படி இருக்க வேண்டும்? முதலாவதாக, அநீதியை வேரோடு பிடுங்கி எறிய முயற்சிப்பது இறைநம்பிக்கையாளர்களின் சமுதாயப் பொறுப்பு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அநீதியான அரசனின் முன்னிலையில் சத்தியத்தையும் நீதியையும் எடுத்துரைப்பதுதான் சிறந்த போராட்டம்!' (அறிவிப்பாளர் : அபூ ஸஈத்(ரலி), நூல்கள் : திர்மிதி, அபூ தாவூத், இப்னு மாஜா)

**நன்மைகளைக் கட்டிக்காப்பவர்கள் களம் காணாமலேயே இருந்து விட்டால், நாட்டில் இருக்கும் நல்லவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பொதுமக்களைத் தங்களின் பக்கம் கவர்ந்து நல்ல வழியில் செலுத்தும் முயற்சி எதுவுமே செய்யா விட்டால், தீய சக்திகளின் செல்வாக்கு பெருகிக் கொண்டே போகும்.**

எனவே, அநீதியையும் அசத்தியத்தையும் ஒழித்துக் கட்டுவதற்கு அரசியலில் நமக்கு இருக்கும் ஜனநாயக உரிமையை நாம் பயன்படுத்தியாக வேண்டும். குறிப்பாக, ஆட்சியிலும் அதிகாரத்திலும் யார் வர வேண்டும் என்பதை விட யார் வரக்கூடாது என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். அதுதான் இன்றைக்கு உண்மையான அரசியல் விழிப்பு உணர்வு. அதுதான் உண்மையான சமுதாயப் பொறுப்பு உணர்வு!

திருக்குர்ஆன் இந்த சமூகப் பங்களிப்பைப் பற்றி இப்படிக்

கூறுகிறது: ‘எப்பணி நல்லதாகவும் இறையச்சத்திற்கு உரியதாகவும் உள்ளதோ அதில் எல்லோருடனும் ஒத்துழையுங்கள்! ஆனால் எது பாவமானதாகவும், வரம்பு கடந்ததாகவும் உள்ளதோ அதில் எவருடனும் ஒத்துழையாதீர்கள்’ (திருக்குர்ஆன் 5:2)

அதே நேரத்தில் அரசியலில் வாக்களிக்கும் பொறுப்பு பற்றி ஓர் எச்சரிக்கையையும் குர்ஆன் எடுத்துச் சொல்கிறது. அதனையும் நாம் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

‘யார் நன்மைக்காகப் பரிந்துரைக்கின்றாரோ அவர் அந்நன்மையில் பங்கு பெறுவார்; மேலும், யார் தீமைக்காகப் பரிந்துரைக்கின்றாரோ அவர் அத்தீமையில் பங்கு பெறுவார். மேலும், அல்லாஹ் எல்லாவற்றையும் கண்காணிப்பவனாக இருக்கின்றான்’ (திருக்குர்ஆன் 4:85)

ஒரு ஆட்சி ஒழுக்கமாக, சீராக, நீதியாக நடைபெறுவது மக்களின் கையில்தான் இருக்கிறது. மக்கள் எவ்வழியோ மன்னன் அவ்வழி! எனும் மூதுரை இதனைத் தெளிவாக உணர்த்துகிறது. அண்ணல் நபி(ஸல்) அவர்களும் இதனை இப்படிக் கூறினார்கள்: ‘மக்களாகிய நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர்களோ அவ்வாறே உங்களின் மீது ஆட்சியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்!’ (அறிவிப்பாளர் : அபூ இஸ்ஹாக்(ரலி) நூல் : மிஷ்காத்)

நபி(ஸல்) அவர்கள் அடைந்த மக்கா வெற்றியின் பின்னணியில் அண்ணலாரின் அரசியல் நடவடிக்கைகள் சிலவற்றைக் குறித்தும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மக்காவில் நபிகளாருக்குத் துணை நிற்பதற்கும் உதவி செய்வதற்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய மிகச்சில தோழர்களும் அபூதாலிப், அப்பாஸ் போன்ற அண்ணலாரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சில அனுதாபிகளும் மட்டுமே இருந்தார்கள். அதனால் அந்தக் கட்டத்தின் போராட்டம் அரசியல் களத்திலும் பரவுவதற்கான சூழ்நிலை முழுக்க முழுக்க சாதகமாக இருக்கவில்லை.

ஆனால், பத்ர் யுத்தத்திலிருந்து அவர்களின் போராட்டம் ஒரு புதிய கட்டத்திற்குள் காலடி எடுத்து வைத்தது. மதீனாவை அடைந்தவுடன் சூழ்நிலையின் போக்கு முழுக்க மாறி விட்டது. மதீனாவில் இஸ்லாமிய இயக்கமும் முஸ்லிம்களும் ஒரு வலிமையான மக்கள் சக்தியாக மாறி விட்டார்கள். இரண்டு அகபா ஒப்பந்தங்களின் கொள்கைச் சொந்தங்கள் எனும் முறையில் மதீனாவின் இரண்டு பிரபலமான குலத்தார்கள் மதீனா ஒப்பந்தத்தின் வாயிலாக மதீனாவின் ஆரம்ப கால குடியேற்றக்காரர்களான யூதர்கள், மதீனாவின் பூர்வ குடிகளான இணைவைப்பாளர்களான அரபுக் குலங்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு பரந்த வெகுஜன முன்னணியாக இஸ்லாமிய இயக்கம் வலிமையடைந்ததை நபி(ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கையில் நாம் காண்கிறோம்.

இப்படி ஓர் அரசியல் அதிகாரத்தை தமக்கு வழங்க வேண்டுமென மக்காவிலேயே நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்திருந்தார்கள். அது மட்டுமல்ல; அப்படி ஓர் அரசியல் அதிகாரத்தை தன்னிடம் கேட்குமாறு அல்லாஹ்வே வசனத்தை இறக்கியும் இருந்தான். ‘மேலும், பிரார்த்தனை புரிவீராக: ‘என் இறைவனே! நீ என்னை எங்கு கொண்டு சென்றாலும் உண்மையுடன் கொண்டு செல்வாயாக! என்னை எங்கிருந்து வெளியேற்றினாலும் உண்மையுடன் வெளியேற்றுவாயாக! உன் தரப்பிலிருந்து எனக்குப் பக்கபலமாக ஓர் அதிகாரத்தை வழங்குவாயாக!’ (திருக்குர்ஆன் 17:80)

அதாவது, ஒன்று நீ என்னை சுயபலம் கொண்டவனாக்க வேண்டும். அல்லது, ஏதாவது அதிகாரத்தை எனது உதவியாக்க வேண்டும். ஏனென்றால், அந்த பலத்தால் இந்த உலகத்தின் குறைபாடுகளைச் சீரமைக்க என்னால் முடியும். இந்தத் தீய செயல்கள், குற்றங்களின் பெருக்கத்தை என்னால் தடுத்து நிறுத்த முடியும். உன்னுடைய நீதியான சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

ஹஸன் பஸரீ(ரஹ்), கதாதா(ரஹ்) ஆகியோர் இந்த வசனத்திற்கு இந்த விளக்கத்தைத்தான் வழங்கியுள்ளனர். இப்னு கஸீர்(ரஹ்), இப்னு ஜரீர்(ரஹ்) போன்ற பிரபல விரிவுரை

யாளர்களும் இதைத்தான் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அதுமட்டுமல்ல; ஒரு நபிமொழியும் இந்தக் கருத்தை வலுப்படுத்துகிறது. ‘அல்லாஹ் குர்ஆன் மூலம் தடை செய்யாத விஷயங்களை அரசியல் அதிகாரத்தின் மூலம் தடை செய்கின்றான்’.

இஸ்லாம் இந்த உலகத்தில் ஏற்படுத்த விரும்புகின்ற சீரமைப்பு சாதாரண அறிவுரைகளாலும் உணர்வூட்டல்களாலும் மட்டும் சாத்தியமில்லை என்பதையும், அதற்கு அரசியல் பலமும் தேவையென்பதையும் இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

இந்தப் பிரார்த்தனையை நபி(ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வே கற்றுத்தரும் போது அதிலிருந்து இன்னொரு விஷயமும் உறுதியாகிறது. அதாவது தீனை நிலை நிறுத்துவது, ஷரீஅத்தை நடைமுறைப் படுத்துவது, தண்டனைகளைச் செயல் படுத்துவது இவற்றுக்காக அரசியல் அதிகாரத்தை விரும்புவதும் அது கிடைப்பதற்காக முயற்சிப்பதும் அனுமதிக்கப்பட்டது மட்டுமல்ல; அவசியமானதும் சுன்னத்துமாகும்.


இதனை உலகாதாய நோக்கம் என்பவர்கள் தவறான கருத்தில்தான் சிக்கியுள்ளனர். ஒரு தனி மனிதன் தனக்காக அரசியல் அதிகாரத்தைத் தேடுகின்றான் என்றால் அதுதான் உலகாதாய நோக்கமாக இருக்க முடியும். இதற்கு மாற்றமாக, அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக அரசியல் அதிகாரத்தைத் தேடும் போது அது இறைவழிபாட்டுக்குச் சமமான நோக்கம் கொண்டதாகும். எனவே தான் மதீனாவின் அந்தக் காலகட்டத்தில் நபி(ஸல்) அவர்களாலும், மக்கள் சமுதாயத்தாலும் தங்களின் போராட்டத்தை கொள்கைத் தளத்திலிருந்து அரசியலின் பக்கமாக முன்னெடுத்துச் செல்லாமல் இருக்க முடியவில்லை.

எனவே இப்படிப்பட்ட நீதியான ஒரு ஆட்சி அமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சி செய்வது, அல்லது அந்த முயற்சியில் தன்னையும் ஓர் அங்கமாக இணைத்துக் கொள்வது ஒவ்வொரு இறைநம்பிக்கையாளனின் தார்மிகக் கடமையாகும்.

இந்த நிலையில் நன்மைகளைக் கட்டிக் காப்பவர்கள் களம் காணாமலேயே இருந்து விட்டால், நாட்டில் இருக்கும் நல்லவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பொதுமக்களைத் தங்களின் பக்கம் கவர்ந்து நல்ல வழியில் செலுத்தும் முயற்சி எதுவுமே செய்யா விட்டால், தீய சக்திகளின் செல்வாக்கு பெருகிக் கொண்டே போகும். பொதுமக்கள் இயற்கையாகவே அதன் பக்கம் தள்ளப்பட்டு விடுவார்கள். தீயவர்கள் அவர்களைத் தங்களின் வழியில் இழுத்துச் சென்று விடுவார்கள். இன்று அதுதானே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் நன்மையைக் கட்டிக் காப்பவர்கள் களத்தில் இருந்தால், அவர்கள் சீர்திருத்தும் கடமையைச் சரியாக நிறைவேற்றினால், பொதுமக்களின் மீது தீயவர்களின் செல்வாக்கு செல்லுபடியாகாது. நேர்மை என்கிற களத்தில், நல்லவர்களை தீயவர்கள் ஒருபோதும் வெற்றி கொள்ளவே முடியாது. உண்மைக்கு முன்னால் பொய்யோ, நம்பிக்கைக்கு முன்னால் நம்பிக்கை மோசடியோ, தர்மத்திற்கு முன்னால் அதர்மமோ எவ்வளவுதான் தன்னுடைய பலத்தைக் காட்டினாலும் இறுதி வெற்றி என்பது, உண்மைக்கும், நம்பிக்கைக்கும், நன்மைக்கும், தர்மத்திற்கும்தான் கிடைக்கும்.

அரசின் முத்திரை வாசகமும் அதுதான் ‘சத்யமேவ ஜெயதே!’- வாய்மையே வெல்லும்!’ இதனைத்தான் திருக்குர்ஆன் மூஸா நபியின் குரலில் இப்படிச் சொல்கிறது: ‘மூஸா, தம் மக்களை நோக்கிக் கூறினார்: ‘அல்லாஹ்விடம் உதவி கோருங்கள்; மேலும், பொறுமையை மேற்கொள்ளுங்கள்! திண்ணமாக, இந்த பூமி அல்லாஹ்வுக்கு உரியது. தன் அடிமைகளில் தான் நாடுவோரை அதற்கு அவன் உரிமையாக்குகிறான். இன்னும் அவனுக்கு அஞ்சிய வண்ணம் வாழ்பவர்களுக்கே இறுதி வெற்றி இருக்கிறது’ (திருக்குர்ஆன் 7:128)



சமகால இஸ்லாமிய அறிஞர்

# சையத் முஹம்மத் நகீப் அல் அத்தாஸ்

## இறைவனிடம் மீண்டார்

**இஸ்லாமிய நாகரிகச் சிந்தனையின் சமகால முன்னணி அறிஞராகக் கருதப்படும் சையத் முஹம்மத் நகீப் அல் அத்தாஸ்** (Syed Muhammad Naquib al Attas) **(வயது 95) 2026 மார்ச் 8 ஆம் நாள் இறைவனிடம் மீண்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஷூன் (நாம் இறைவனிடமிருந்து வந்தோம். அவனிடமே மீளக் கூடியவர்களாய் இருக்கிறோம்)**

நகீப் அல் அத்தாஸ் அவர்களின் இறப்பு மலாய்-இஸ்லாமிய அறிவுலகத்திற்கும், உலக இஸ்லாமிய கல்விச் சூழலுக்கும் பெரும் இழப்பாகப் பார்க்கப்படுகிறது.

05-09-1931 இன்றைய இந்தோனேசியாவின் ஜாவா தீவிலுள்ள போகோர் நகரில் பிறந்த நகீப் அல் அத்தாஸ், தனது வாழ்நாள் முழுவதும் இஸ்லாமியத் தத்துவம், கல்வித் தத்துவம், வரலாறு, மொழியியல், இலக்கியம் போன்ற துறைகளில் ஆழ்ந்த புலமையுடன் பணியாற்றி வந்தார்.

அவரது கல்விப் பயணம் பல்வேறு நாடுகளையும் அறிவுலக மரபுகளையும் கடந்த ஒன்றாக அமைந்தது. தொடக்கத்தில் மலேசியாவின் ஜோகோர் பாருவில் ஆங்கிலக் கல்வியைப் பயின்ற அவர், பின்னர் ஜாவாவில் அரபு மொழி, இஸ்லாமிய அறிவியலில் ஆழமான பயிற்சி பெற்றார். இவ்வாறு ஆங்கிலம், அரபு, மலாய் என மூன்று மொழித் தளங்களில் அவருடைய கல்வியறிவு செழுமையடைந்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் அவர் பிரிட்டிஷ் மலாயா இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். அதன் ஒரு பகுதியாக இங்கிலாந்திலுள்ள ஈட்டன் ஹால், சாண்ட்ஹர்ஸ்ட் இராணுவக் கல்லூரிகளில் பயிற்சி பெற்றார். அந்தக் காலகட்டத்தில் மேற்கத்திய சிந்தனை, தத்துவம், அறிவியல் பார்வை ஆகியவற்றை நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் அவர் உயர்கல்வியைத் தேர்ந்தெடுத்து மலாயா பல்கலைக்கழகத்தில் இளநிலை படிப்பைத் தொடர்ந்தார். தொடர்ந்து கனடாவின் மெக்கில் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்.


அதன் பின் லண்டனின் புகழ்பெற்ற SOAS (School of Oriental and African Studies) நிறுவனத்தில் முனைவர் பட்டம் முடித்தார். அவரது முனைவர் ஆய்வு மலாய் உலகில் சூஃபி மரபின் வரலாறும் தத்துவமும் தொடர்புடையதாக இருந்தது. குறிப்பாக, பதினாறாம் நூற்றாண்டு மலாய் சூஃபி ஞானியான ஹம்ஸா ஃபன்சூரியின் மறைவியல் சிந்தனைகளை அவர் ஆராய்ந்தார்.

அல் அத்தாஸின் அறிவுப் பங்களிப்புகளுள் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது 'அறிவை இஸ்லாமியமாக்குதல்' (Islamisation of Knowledge) என்ற கருத்தாக்கம் ஆகும்.

மேற்கத்திய நவீன அறிவியல், சமூக அறிவியல் கட்டமைப்புகள் பெரும்பாலும் மதச்சார்பின்மை, பொருள்முதல் வாதம், பகுத்தறிவை மையப்படுத்தல் ஆகிய அடிப் படைகளில் உருவாகியுள்ளதாகவும், அவை இஸ்லாமிய உலகக் கண்ணோட்டத்துடன் நேரடியாக ஒத்துப்போகாது எனவும் அவர் வாதிட்டார்.

இதனால் சமகால அறிவுத் துறைகளை இஸ்லாமிய அடிப்படைகளின் வெளிச்சத்தில் மறுவாசிப்பு செய்து அறிவின் நோக்கம், அர்த்தம், மதிப்புநிலை ஆகியவற்றை நேர்த்தி யாக அமைக்க வேண்டுமென்று வலியுறுத் தினார்.

மேற்கத்திய நாகரிகத்தின் சில அடிப் படைப் போக்குகளையும் அவர் விமர்சித் தார். மேற்கத்திய சிந்தனையில் காணப்படும் மதச்சார்பின்மை, இறை மறுப்பு, பொருள் முதல்வாதம் போன்ற அணுகுமுறைகள் மனித வாழ்வின் உயர்ந்த இலக்கு களையும் ஆன்மிகத் தளத்தையும் சுருக்கி விடுகின்றன என்று அவர் கருதினார். மேற்கத்திய அறிவு முறைமையில் ஒரு குழப் பம்(Confusion) நிலவுகிறது; உண்மையான அறிவும் கருத்து நிலையும் கலக்கப்பட்டு மனி தனின் வாழ்க்கை நோக்கமே மங்குகிறது என்ற வாதத்தையும் முன்வைத்தார். இந்த விமர்ச னக் கருத்துகள் அவரது முக்கிய நூலான Islam and Secularism (இஸ்லாமும் மதச்சார்பின் மையும்) எனும் நூலில் விரி வாகக் காணப்படுகின்றன.




கல்வி குறித்த அவரது பார்வையும் தனித்தன்மை கொண்டது. கல்வி என்பது வேலைவாய்ப்பிற்கான திறன்களை மட்டும் வழங்கும் செயலாகக் குறுக்கி விடக் கூடாது என்று அவர் கூறினார். மனிதனின் அறிவும் ஆன்மாவும் ஒழுங்குபெற்று, முழுமையான மனிதன் உருவாகவே கல்வி துணை செய்ய வேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. இதன் மையமாக அவர் 'அதப்' (ஒழுக்க விழுமம்) என்ற கருத்தாக்கத்தை வைத்தார். அதப் - என்பது வெறும் ஒழுக்கம் அல்லது சமூக நெறிமுறை மட்டுமல்ல; ஒவ்வொரு அறிவையும் பொருளையும் அதன் சரியான இடத்தில் வைத்துப் பார்ப்பதும், உண்மைக்கும் அறிவுக்கும் உரிய மரியாதையை வழங்கு வதுமாகும் என்று அவர் விளக்கினார்.

நிறுவனத் தளத்தில் அவரது முக்கியப் பங்களிப்பு 1987ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ISTAC (International Institute of Islamic Thought and Civilization) ஆகும். கோலாலம்பூரில் அமைந்த இந்த நிறுவனம் இஸ்லாமிய சிந்தனை, நாகரிக ஆய்வுகளை சர்வதேசத் தரத்தில் முன்னெடுத்த ஓர் அறிவுக் கேந்தி ரமாக உருவெடுத்தது. இந்த நிறுவனத்தின் கட்டிடக்கலையும் உள்ளமைவும் இஸ்லா மிய அழகியலை நவீன வடிவமைப்புடன் இணைத்த ஒரு சின்னமாகக் கருதப் பட்டது. அவர் அதன் நிறுவன இயக்குநராகவும் முதல் தலைவ ராகவும் பணியாற்றினார். பின் னாளில் ISTAC, சர்வதேச இஸ் லாமிய பல்கலைக்கழகம் (IIUM) சார்பில் இணைக்கப்பட்டதாக வும் குறிப்பிடப்படுகிறது. அல் அத்தாஸ் இருபத்தாறுக்கும் மேற் பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் இஸ்லாமும் மதசார் பின்மையும் (Islam and Secularism), மலாய் உலகில் இஸ்லாமின் வருகை தொடர்பான வரலாற்று ஆய்வுகள், சூஃபி மரபைச் சார்ந்த The Mysticism of Hamzah Fansuri, கல்வித் தத்துவத்தை விளக்கும். இஸ்லாத்தின் கல்விக் கொள்கை (The Concept of Education in Islam) போன்ற படைப்புகள் குறிப்பிடத்தக்கவை.

அவருடைய பங்களிப்புகளுக்குப் பல நாடுகள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் உயரிய அங்கீகாரங்களை வழங்கியுள்ளன. மலேசிய அரசின் கவுரவ விருதுகள், உலகின்

பல பல்கலைக்கழகங்களின் கவுரவ முனைவர் பட்டங்கள் ஆகியவை அவரது அறிவுத் தகுதியை வலியுறுத்துகின்றன. 2013ஆம் ஆண்டு ஜோர்டான் நாட்டின் Royal Aal al-Bayt இஸ்லாமிய சிந்தனை நிறுவனம் உலகின் செல்வாக்கு மிக்க 500 முஸ்லிம்களில் ஒருவராக அவரைத் தேர்ந்தெடுத்ததும் குறிப்பிடத் தக்கது.

அதே நேரத்தில் அவரது கருத்துகள் விமர்சனங்களுக்கும் உள்ளானது. சிலர் மேற்கத்திய நாகரிக விமர்சனம் மிகைப்படுத்தப்பட்டதாகக் கருதினர்; சிலர் 'அறிவை இஸ்லாமியமாக்குதல்' என்ற நடைமுறைச் சாத்தியத்தை கேள்விக்குள்ளாக்கினர். இருப்பினும் இஸ்லாமியக் கல்வி, அறிவியல் உரையாடலில் அவர் ஏற்படுத்திய தாக்கம் மறுக்க முடியாதது என்றே பலரும் வலியுறுத்துகின்றனர்.

மொத்தத்தில் சையத் முஹம்மத் நகீப் அல் அத்தாஸ் இருபதாம் நூற்றாண்டின் முக்கியமான இஸ்லாமியச் சிந்தனையாளர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். மேற்கத்திய அறிவு ஆதிக்கம் வலுப்பெற்ற காலத்தில், இஸ்லாமியச் சிந்தனை மரபின் தனித்துவத்தையும் அதன் ஆழ்ந்த அறிவுக் கட்டமைப்பையும் அவர் மீள வலியுறுத்தினார். அவர் எழுதிய நூல்கள், உருவாக்கிய சிந்தனைத் தளம், நிறுவிய கல்வி அமைப்புகள் ஆகியவை தொடர்ந்து உலகளவில் இஸ்லாமிய அறிவுலகுக்கு வழிகாட்டியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அவருடைய இஸ்லாத்தில் கல்விக் கொள்கை - Concept of Education in Islamic Philosophy என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பை இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட் (IFT) வெளியிட உள்ள நிலையில் அவருடைய மரணம் கவலையளிக்கின்றது. அன்னாரின் பிழைகளை இறைவன் மன்னித்து, அருள் புரிவானாக)

**– Dr.J. முஹையுதீன்**


Press & Registration of Books Act Registration of Newspaper (Chennai) Rules 1956 Form IV (See Rule 8) Statements About Ownership & other Particulars about News Paper.

| | | |
|---|---|---|
| Place of Publication | : | 138, Perambur High Road Chennai -12 |
| Periodicityof Its publication | : | Fortnightly |
| Printer's Name | : | S. Rajan |
| Nationality | : | Indian |
| Address | : | Bharani Offset Printers, 77, Venkatathri Street, Kosapet, Chennai - 12. |
| Publisher's Name | : | H. Abdur Raqeeb |
| Nationality | : | Indian |
| Address | : | 138, Perambur High Road, Chennai -12 |
| Editor's Name | : | H. Abdur Raqeeb |
| Nationality | : | Indian |
| Address | : | 138, Perambur High Road, Chennai -12 |
| Owner's Name(s) | : | Creative Communication Chennai |
| a) Please State the Particulars of individuals or of the firm, joint stock company, Trust, Co-operative society or Association which owns the news paper | : | Trust - represented by its Chairman |

I, H. Abdur Raqeeb here by declare that the Particulars given are true to the best of my knowledge and belief.

Dated : 28-02-2026

(sd) **H. Abdur Raqeeb**
Signature of Publisher



**ஒரு வாட்ஸ்அப் மெஸேஜ் போதும்!**

- **இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.**
- **இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்**
- **இது ஓர் அஞ்சல் வழி நூலகம்**

**உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.**

**இஸ்லாமிக் அகாடமி**
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

படிப்பது சுகமே ! கற்பது நலமே !

# RDB கல்வி நிறுவனங்கள்

RDB Educational & Charitable Trust

AIM HIGH AIM FAR

ISO 9001 : 2000 உலகத் தரச் சான்று பெற்ற கல்லூரி.

எண்:4, சாலியமங்கலம் ரோடு, பாபநாசம் - 614 205. தஞ்சாவூர் மாவட்டம்.

## ADMISSIONS OPEN

### RAJAGIRI DAWOOD BATCHA COLLEGE OF ARTS AND SCIENCE

Recognized by UGC under Section 2 (f) & 12(B) | Affiliated to Bharathidasan University, Tiruchirappalli

**UG COURSES**

B.Lit. Tamil | B.A. English
B.B.A., | B.Com., | B.Com., (Commerce)
B.Com., (Computer Application)
B.Com., (Bank Management)
B.C.A., (Computer Application)
B.Sc., (Artificial Intelligence)
B.Sc., (Information Technology)
B.Sc., (Bio-Technology)
B.Sc., (Mathematics)
B.Sc., (Visual Communication)
B.Sc. Mathematics / Physics / Biotechnology
B.Sc. Biochemistry / Microbiology
B.Sc. Visual Communication
B.Sc. Hotel Management & Catering Science
B.Sc. Fashion Technology & Design *
B.Sc. Nutrition and Dietetics *
B.Sc. Psychology *
B.A. Islamic studies *

**PG COURSES**

M.B.A., (Hospital Management)
M.B.A., (General)
M.Com., (Commerce)
M.Sc., (Computer Science)
M.Sc. Information Technology

**RESEARCH COURSE**

M.Phil., (Computer Science)
M.Phil., (Commerce)
M.Phil., (Management)
Ph.D., (Management)
Ph.D., (Commerce)

### RDB MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

(Approved by Department of School Education, Govt. of Tamil nadu Approval No : 5353A.1/2.20)

**LKG to XII Std**

**+1 COURSES OFFERED**

1. Maths - Physics - Chemistry - Biology
2. Maths - Physics - Chemistry - Computer Science
3. Physics - Chemistry - Botany - Zoology
4. Physics - Chemistry - Biology - Computer Science
5. Economics - Commerce - Accountancy - Computer Application
6. Economics - Commerce - Accountancy - History
7. Economics - Commerce - Accountancy - Business Maths

### RDB COLLEGE OF EDUCATION

(Affiliated to Tamil Nadu Teachers Education University, Chennai) Accredited by NAAC with "B" Grade

- B.Ed. (2 Year Programme)
- M.Ed. (2 Year Programme)

### RDB INSTITUTE OF MANAGEMENT

(Approved by AICTE, Affiliated to Bharathidasan University)

- M.B.A. (HR, Finance, Operation, Systems, Marketing)
- M.B.A. (Hospital Management)

**RESEARCH COURSE**

- M.Phil., Management
- Ph.D., Management

### RDB SCHOOL OF NURSING & PARAMEDICAL SCIENCE (ANM)

(Approved By Tamil Nadu Nursing Council Health and Family Welfare)

- Diploma in Auxiliary Nurses and Midwives (ANM)
(2 Year Diploma Programme)

### RDB COLLEGE OF NURSING AND PARAMEDICAL SCIENCE

**OPENING SOON**

*All Muslim Parents are Requested to Support us in Admissions*

**HOSTEL AVAILABLE FOR GIRL STUDENTS**

63809 80363 / 04374-222123

admissions@rdbcas.edu.in

### அமெரிக்க - இஸ்ரேல் - ஈரான்

# போரும், தீர்வும்

- டாக்டர் K.V.S. ஹபீப் முஹம்மத்

மத்திய கிழக்கு பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இதுவரை ஆயிரக்கணக்கானோர் கொல்லப் பட்டிருக்கிறார்கள். ஈரானில் ஒரு பள்ளிக்கூடத்தில் 165 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டிருக் கிறார்கள். எண்ணெய்க் கிணறுகள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கின்றன. விமான நிலை யங்களில் விமானங்கள் ஓட முடியாத அளவுக்குத் தளங்கள் சேதமடைந்திருக்கின்றன. விமானப் போக்குவரத்து முடங்கி இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஈரானுடைய உயர்மட்டத் தலைவர் ஆயத்துல்லாஹ் அலீ கமேனியும், அவர் குடும்பமும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறது.

உலகம் அமெரிக்காவின் சட்டைப் பையில்! அமெரிக்காவோ இஸ்ரேலின் சட்டைப் பையில்! இந்த உலகத்தை ஆட்டி விக்க விரும்புகிறது அமெரிக்கா. ஆனால் அமெரிக்காவை ஆட்டிவிக்கிறது இஸ்ரேல். இதுதான் இந்தப் போருக்கான காரணம். சிலர் இந்தப் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். சிலர் மௌனம் காக்கிறார்கள். சிலர் ஆதரவும் அளிக்கிறார்கள். இங்கே மதவெறுப்பு கூட புகுந்து கொள்கிறது. மதவெறுப்பின் அடிப்படையில் ஆதரவு தெரிவிப்பவர்களும் இருக்கிறார்கள்.

### போரைத் தொடங்கியது யார்?

இஸ்ரேலும் அமெரிக்காவும் சேர்ந்துதான் இந்தப் போரைத் தொடங்கினார்கள். அதுவும் பேச்சு வார்த்தை ஓமனில் நடந்து கொண் டிருக்கிறது. முக்கிய கட்டத்தை அந்தப் பேச்சு வார்த்தை எட்டிவிட்டது. ஓமனுடைய அந்த சமாதானப் பேச்சுவார்த்தையில், ‘ஈரான் இனிமேல் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில்லை என்றும் அணு ஆயுதத் திற்குத் தேவையானவற்றைச் சேகரிப் பதில்லை’ என்றும் ஒரு முடிவுக்கு வந்து விட்டதாகவும் கூறினார்கள்.

இதைத்தான் அமெரிக்கா எதிர்பார்த்தது. ஆனால் பேச்சு வார்த்தை நடந்து கொண் டிருக்கின்ற போதே, அதுவும் தீர்வை எட்டி விட்ட சூழலில் அமெரிக்கா குண்டு வீசத் தொடங்கிவிட்டது. இந்தப் பேச்சு வார்த்தை சமாதானத்தில் முடிந்துவிட்டால் போர் தொடுக்க முடியாமல் ஆகிவிடுமோ, நாம் ஈரானை அழிக்க நினைக்கிறோம். ஆனால் சமாதானப் பேச்சில் உடன்பாடு வந்துவிடும் போல் தெரிகிறதே என்று பயந்து முந்திக் கொண்டு அமெரிக்கா இந்தப் போரைத் தொடங்கி விட்டது. போருக்கான எந்த முகாந்திரமும் இல்லை.

போரை நியாயப்படுத்துவதற்கு அவர்கள் சொல்லிய மற்றொரு காரணம். Premptive Strike என்று சொன்னார்கள். அதாவது எதிரி தாக்குவதற்கு முன்னரே நாம் அவர்களைத் தாக்கி விட வேண்டும். எனவே ஈரான் எங்களைத் தாக்குவதற்கு முன்னரே நாங்கள் தாக்கி விட வேண்டும் என்று சொல்லி இந்தப் போரை அமெரிக்காவும் இஸ்ரேலும் நியாயப்படுத்தியது. ஆனால் போரைத் தொடங்கும் எந்த நோக்கமும் ஈரானுக்குக் கிடையாது. போரைத் தொடங்குவதற்கான எந்த அறிகுறியும் இல்லை என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகளே சொல்லி இருக் கிறார்கள். அப்படி இருக்க போரைத் தொடங்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?

இவர்கள் ஐக்கிய நாடுகள் சபையைக் கலந்தாலோசித்தார்களா? ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள பாதுகாப்புச் சபையை கலந்தாலோசித்தார்களா இல்லை அமெரிக்காவில் உள்ள காங்கிரஸைத்தான் கலந்தாலோசித்தார்களா? எதுவுமே செய்யாமல் இந்தப் போரைத் தொடங்கி விட்டார்கள். இஸ்ரேல் அதிபர் நெதன்யாகு கொடுத்த நெருக்கடி தாங்க முடியாமல் ட்ரம்பும் இந்தப் போரிலே குதித்து விட்டார். அவர்களுடைய நோக்கம் ஈரானை ஒழித்துக் கட்டுவது ஒன்றுதான்.

மத்திய கிழக்கில் அவர்களுக்கு வேறு யாரும் சவாலாக இல்லை. அரபு நாடுகள் எல்லாமே பலவீனமானவர்கள். அவர்களிடத்திலே எண்ணெய் வளம் இருக்கலாம். ஆனால் அறிவு, தொழில்நுட்ப வளம், இராணுவ பலம் எதுவுமே அவர்களிடத்தில் கிடையாது. அங்கு மக்களாட்சியும் கிடையாது. மக்களாட்சி இருந்தால் மக்கள் ஆட்சியைக் காப்பாற்றுவார்கள். எங்கே தங்களுடைய மன்னராட்சி கவிழ்ந்து விடுமோ என்ற பயத்தில் அமெரிக்காவோடு, இஸ்ரேலோடு நெருக்கமாக இருக்கின்றார்கள். வியாபார ஒப்பந்தம், இராணுவ ஒப்பந்தம், ஆபிரகாம் ஒப்பந்தம், கேம் டேவிட் ஒப்பந்தம் என்று பல ஒப்பந்தங்களைப் போட்டு இஸ்ரேலைச் சமாதானப் படுத்துகிறார்கள். ஆகவே அரபு நாடுகளைப் பற்றி இஸ்ரேலுக்கு எந்த பயமும் கிடையாது, அவர்கள் அடிமைகள்.



ஈரான்தான் ஹிஸ்புல்லாஹ், ஹமாஸ் ஆகியவற்றுக்கு ஆதரவு தருகின்றது. எனவே இவர்களை ஒழித்துவிட்டால் அந்த இயக்கங்களை ஒழித்து விடலாம். ஈரான் மீது இவர்கள் போர் தொடுப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

இன்னொரு முக்கியமான காரணம் எப்ஸ்டீன் பைல்ஸ். பாலியல் சேட்டைகள், காமக் களியாட்டங்கள் நடைபெற்ற நிகழ்வுகளில் இவர்களும் இருக்கின்றார்கள். நாம் மிகவும் உயரத்தில் வைத்துப் பார்த்த தலைவர்கள் பலர் குழந்தைகளோடு பாலியல் வன்முறைகள் செய்திருக்கிறார்கள். அதில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பெயரும் இருக்கிறது. அது தொடர்பான காட்சிகள் வெளியாகி வெடிக்கக் காத்திருக்கும் எரிமலையாக இருக்கிறது. இந்த எப்ஸ்டீன் பைல் விவகாரத்திலிருந்து மக்களுடைய கவனத்தை, உலகத்தினுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்காகவும் இவர்கள் இந்தப் போரைத் தொடங்கியிருக்கின்றார்கள். இது அமெரிக்க மக்களுக்குச் செய்கிற துரோகம். அமெரிக்க மக்களுடைய வரிப்பணத்தை இன்னொரு நாட்டுக்காக அமெரிக்கா செலவழித்துக் கொண்டிருக்கிறது.

இந்தப் போருக்காக அமெரிக்கா சொல்கின்ற இன்னொரு காரணம் நாங்கள் ஆட்சி மாற்றம் செய்ய விரும்புகிறோம் என்று சொல்கிறார்கள். எல்லாவற்றுக்கும் காரணம் ஈரானின் தலைமையில் இருக்கக் கூடியவர்கள் தான் காரணம். அவர்களைப் பதவியிலிருந்து நீக்கி விட்டால் இந்தப் பிரச்னை தீர்ந்து விடும் என்று அமெரிக்கா சொல்கிறது. ஆனால் அவர்களுக்குத் தெரியாத உண்மையா? முன்பு அவர்கள் சிரியாவை, லிபியாவை, கத்தாபியை, சதாம் ஹுசைனை, ஆப்கானிஸ்தானை அழித்தார்கள். அவை எல்லாம் சின்னஞ்சிறிய நாடுகள். இராணுவத்திலே வலிமை குன்றிய நாடுகள். அங்கும் எதேச்சதிகார ஆட்சி நடைபெற்றது. மக்கள் அந்த அரசர்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை. ஆகவே அவர்

**பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கின்ற போதே, அதுவும் தீர்வை எட்டிவிட்ட சூழலில் அமெரிக்கா குண்டு வீசத் தொடங்கிவிட்டது. இந்தப் பேச்சு வார்த்தை சமாதானத்தில் முடிந்துவிட்டால் போர் தொடுக்க முடியாமல் ஆகிவிடுமோ, நாம் ஈரானை அழிக்க நினைக்கிறோம். ஆனால் சமாதானப் பேச்சில் உடன்பாடு வந்துவிடும் போல் தெரிகிறதே என்று பயந்து முந்திக் கொண்டு அமெரிக்கா இந்தப் போரைத் தொடங்கி விட்டது.**

களை எளிதில் வெல்ல முடிந்தது. ஆனால் ஈரான் அப்படி அல்ல.

ஈரான் 9 கோடி மக்களைக் கொண்டிருக்கின்ற ஒரு நாடு. அது ஒரு ஜனநாயக நாடு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அங்கு இருக்கிறது. அதில் சில குறைகள் இருக்கலாம். அது வேறு விஷயம். மத்திய கிழக்கிலேயே ஜனநாயக முறைப்படி இயங்குகின்ற ஒரு நாடு ஈரான். மக்களுடைய ஆதரவு என்றுமே அரசுக்கு உண்டு. இப்போது முல்லாக்களுடைய ஆட்சி என்றெல்லாம் சொல்கிறார்கள். இவர்கள் எப்படி ஆட்சிக்கு வந்தார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டாமா? ஈரான் நாடு முதலில் ஜனநாயக நாடாக இருந்தது. எண்ணெய் வளம் அங்கே கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அந்த எண்ணெய் வளத்தை அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் அனுபவித்துக் கொண்டிருந்தன. இதற்கு ஒரு முட்டுக்கட்டை போட்டார் அன்றைய ஆட்சியாளரான முசாதிக். 1953இல் எண்ணெய் கிடங்குகளை எல்லாம் தேசிய மயமாக்கினார்.

அதனால் அமெரிக்காவுக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் நின்று போயிற்று. எனவே முசாதிக் ஆட்சியைக் கவிழ்த்து விட்டு அமெரிக்க தங்கள் விருப்பத்தின்படி செயல்படும் மன்னர் ஷாவை ஆட்சியில் அமர்த்தியது. 1953லிருந்து 1979 வரை மன்னர் ஷா ஆட்சி தொடர்ந்தது. அக்காலக் கட்டத்தில் எண்ணெய் வருமானம் கிடைத்தது. 1979ஆம் ஆண்டில் ஆயத்துல்லாஹ் கொமேனி ஒரு புரட்சியைக் கொண்டு வந்து ஷாவின் மன்னராட்சியை அகற்றி விட்டு அங்கே மக்களாட்சியைக் கொண்டு வந்தார். மக்களுடைய பெரும் ஆதரவோடு அவர் ஆட்சிக்கு வந்தார். இவர்கள் கட்டமைப்பது போன்று ஈரானில் இருப்பது ஒரு பொம்மை அரசாங்கம் அல்ல. அமெரிக்கர்களால் பாதுகாக்கப்பட்ட ஓர் அரசாங்கம் அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம்.

ஈரான் இராணுவ ரீதியாக வலிமை பொருந்திய ஒரு நாடு. ஏராளமான ஏவுகணைகள், ட்ரோன்களை வைத்திருக்கின்ற ஒரு நாடு. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் ஈரானுக்கு எதிராக அமெரிக்கா போர் தொடுத்தது. 12 நாளுக்கு மேல் அந்தப் போரைத் தொடர முடியவில்லை. அப்போதே ஈரானின் வலிமையைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஈரானில் 1979இல் கொமேனி ஆட்சிக்கு வந்த பிறகு பக்கத்து நாடான ஈராக்கில் இருந்த சதாம் உசேனை ஏவிவிட்டு ஈரான் மீது போர்தொடுக்க வைத்தது அமெரிக்கா. அதிலும் தோல்வியுற்றது. பின்னர் ஈரான் மீது ஏராளமான பொருளாதாரத் தடைகளை விதித்தது. ஆனால் அத்தனையும் எதிர்கொண்டு ஈரான் முன்னேறிக் கொண்டே இருக்கிறது.

இந்த ஆட்சியைக் கவிழ்த்து விட்டால் ஈரானுக்குள் உள்நாட்டுப் போர் வரும். அதனால் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று அமெரிக்கா தவறான கணக்குப்போட்டது. இப்போது அமெரிக்கா ஆழம் தெரியாமல் காலை விட்டுட்டு அவதிப்படுகிறது. அமெரிக்கா நினைத்தது ஒன்று. இப்போது நடப்பது ஒன்று. ராணுவ ரீதியாகவும், ராஜதந்திரத்திலும், எல்லா வகையிலும் அமெரிக்காவும் இஸ்ரேலும் படுதோல்வி அடைந்துள்ள நிலையில் போரை முடிவுக்குக் கொண்டு வர வழியின்று விழி பிதுங்கி நிற்கின்றன.

# என்று முடியும் இந்தப் போர்?

பொதுவாக எல்லாப் போர்களிலும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எட்டப்படும். இந்தப் போரிலும் அதைத்தான் செய்தாக வேண்டும். ஆனால் அமெரிக்காவை நம்பி எதுவுமே செய்ய முடியாது. கொடுத்த வாக்குறுதியை அவர்கள் காப்பாற்றுவதே கிடையாது. 2015இல் ஒபாமா அமெரிக்க அதிபராக இருந்த போது ஓர் ஒப்பந்தம் போடப்பட்டது. பல நாடுகளும் அதில் இடம் பெற்றிருந்தன. அந்த ஒப்பந்தத்தை அமெரிக்காவும் ஏற்றுக்கொண்டு ஈரான் மீது போடப்பட்ட தடைகள் எல்லாம் நீக்கப்பட்டன. ட்ரம்ப் ஆட்சிக்கு வந்த பிறகு நிலைமை மாறியது. 2018 இல், 'நான் இந்த ஒப்பந்தத்தை விட்டு வெளியேறுகிறேன்' என்று சொல்லி விட்டு மீண்டும் ஈரான் மீது தடைகளைப் போட்டு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கினார்.

ஒப்பந்ததைக்கூட பேண முடியாத இவர்கள்தாம் உலகத் தலைமைக்கு ஆசைப்படுகிறார்கள். இப்போது கூடப் பாருங்கள். ஓமனில் அமைதிப் பேச்சு வார்த்தை நடக்கிறது. ஒரு நல்ல முடிவை எட்டும் சூழலில் குண்டுமழை பொழிகின்றார்கள். சமாதானப் பேச்சு வார்த்தைக்கு என்ன அர்த்தம்? இவர்களின் உள்நோக்கம் வேறானது. எனவே பேச்சுவார்த்தை மூலம் அமெரிக்காவை வழிக்குக் கொண்டுவர முடியுமா என்பது ஒரு பெரிய கேள்வி.

அமெரிக்கா Unipolar World என்ற ஒருமுனை உலகத்தைக் கட்டமைக்க விரும்புகின்றது. ஒருமுனை உலகம் என்றால் எல்லாமே தன் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இந்த உலகத்தின் பொருளாதாரம், வல்லமை, தொழில்நுட்பம், விஞ்ஞானம், அரசியல் எல்லாம் தன் பிடிக்குள் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. நாங்கள் விரும்புவதுதான் நடக்க வேண்டும், எங்களுக்கு எவரும் எதிரிகளாக இருக்கக்கூடாது. வல்லவன் வகுத்ததே வாய்க்கால் என்பது போல Might is Right என்று அவர்கள் வைப்பதே சட்டம் அதன்படி எல்லாரும் நடக்க வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நிலை.

ஈரானில் 165 குழந்தைகள் குண்டு வீச்சில் பலியாகி இருக்கின்றார்கள். இஸ்ரேல் தாங்கள் குண்டு போடவில்லை என்று சொல்கிறது. அப்படியானால் யார் குண்டுபோட்டது? ஈரான் தங்கள் மீது தாங்களே குண்டுவீசிவிட்டது என்று கொஞ்சம் கூட கூசாமல் ட்ரம்ப் சொல்கிறார். ஈரான் தன் சொந்தக் குழந்தைகளை அழிப்பதற்காகக் குண்டு போட்டது என்பதை உலகத்தில் யாராவது நம்புவார்களா?

'நாங்கள் ஜூன் மாதம் நடத்திய தாக்குதலில் அணு சம்பந்தமான எல்லாப் பொருட்களையும் தகர்த்துவிட்டோம்' என்று இதே அமெரிக்காதான் சொன்னது. பின்னர் இப்போது ஏன் போர் தொடுக்க வேண்டும்? இப்படி முரண்பாடாகப் பேசிக்கொண்டிருக்கும் அமெரிக்காவோடு எப்படி ஒப்பந்தம் செய்ய முடியும். எனவே இதை எதிர்த்துக் குரல் எழுப்ப வேண்டும்.

சிலர் மௌனம் காக்கின்றார்கள், சிலர் அமெரிக்காவுக்குப் பயந்து கொண்டு அமெரிக்காவை ஆதரிக்கிறார்கள். உலக நாடுகளில் பல நாடுகள் இந்தப் போரில் யாரை ஆதரித்தால் நமக்கு லாபம் என்று சுயநலமாய்ச் சிந்திக்கின்றார்கள். நியாயம் யார் பக்கம்? தர்மம், நீதி, அகிம்சை எங்கே? என்பதைப் பற்றி யாரும் கவலைப்படுவது இல்லை. நம் நாட்டுக்கு என்ன பாதிப்பு என்பதைத் தவிர அவர்கள் வேறு எதையும் சிந்திப்பதாக இல்லை.

### உலக நாடுகளின் பொறுப்புகள்

உலக நாடுகளில் பல இரட்டை நிலை கொண்டிருக்கின்றன. அணு ஆயுதம் உலகத்தில் பல நாடுகளில் இருக்கின்றது. அமெரிக்கா, இஸ்ரேல், பாகிஸ்தான், இந்தியா, ஐரோப்பிய நாடுகள் பல வற்றில் இருக்கின்றது. இவர்களெல்லாம் வைத்துக்

கொள்ளலாம். ஆனால் ஈரான் மட்டும் வைக்கக் கூடாது என்பது என்ன நியாயம்? ஈரான் அணு ஆயுதத்தைத் தயாரிக்கவில்லை. ஆனால் அணு உற்பத்தியில் ஈடுபட்டிருக் கிறோம் என்று கூறுகிறது. எரிபொருளை உண்டாக்குவதற்காகத்தான் நாங்கள் ஈடுபடு கிறோமே தவிர எந்த அணுகுண்டுகளையும் நாங்கள் தயாரிக்கவில்லை என்று ஈரான் சொல் கிறது. அவர்கள் அணு ஆயுதப் பரவல் தடைச் சட்டத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

அணு ஆயுதத் தயாரிப்பைக் கண்காணிக்க சர்வதேச அணு ஆயுதக் கழகம் (International Atomic Energy Agency) என்று குழு ஒன்று இருக்கிறது. உலகத்தில் நடக்கின்ற எல்லா அணு ஆயுத உற்பத்தியையும் கண்காணிக் கின்ற இந்தக் குழு எந்த நேரத்திலும் வந்து எங்கள் அணு ஆயுதங்களைப் பார்க்கலாம் என்று ஈரான் சொல்கிறது. ஒருபுறம் சுயநலம், மறுபுறம் இரட்டை நிலை. இப்படி உலக நாடுகள் நடந்து கொண்டால் உலகில் எப்படி அமைதி ஏற்படும்? எனவே பேச்சு வார்த்தை தான் தீர்வு. அதில் எந்த ஐயமும் இல்லை.

ஆனால் அந்தப் பேச்சு வார்த்தை எப்படி இருக்க வேண்டும்? உறுதியாக இருக்க வேண்டும். அந்தப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்கின்ற நாடுகள் உறுதிமொழி கொடுக்க வேண்டும். இந்தப் பேச்சு வார்த் தையில் எடுக்கப்பட்ட முடிவுகள் இரண்டு தரப்பினராலும் பின்பற்றப்பட வேண்டும். அவற்றை மீறுகின்ற நாடுகளின் மீது நட வடிக்கை எடுப்போம். பொருளாதாரத் தடை களை விதிப்போம், அவர்களை ஒதுக்கி வைப்போம் என்று சொல்ல வேண்டும்.

### பொதுமக்களின் பொறுப்புகள்

நம் ஒவ்வொருவருக்கும் இதில் பொறுப்பு இருக்கின்றது. நாம் எல்லோருக்கும் ஒரே உணர்வு இருக்க வேண்டும். ஏகாதிபத்தியத்தை ஒழிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட நாடு ஆதிக்கம் பெற்று உலகத் தையே முடக்கிப் போடுகிற



அளவுக்கு இருக்கிறது என்ற நிலையை மாற்ற வேண்டும். அமெரிக்கா இந்தியாவுக்கு 30 நாள்களுக்கு ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்கிறது. இதைச் சொல்வதற்கு இவர்கள் யார்? எங்கு என்ன வாங்கலாம்? எவ்வளவு நாளைக்கு வாங்கலாம்? என்ன விலை கொடுத்து வாங்க லாம் என்று இந்தியா தான் முடிவு செய்ய வேண்டும். அந்தந்த நாடுகள் தான் முடிவு செய்ய வேண்டும். எனவே இந்த ஏகாதிபத்திய சக்திகளை முறியடிக்க அனைவரும் சாதி மதம் எல்லா உணர்வுகளையும் கடந்து ஒன்றுபட வேண்டும்.

பலருக்கு இங்கு மத வெறுப்பு குறுக் கிடுகிறது. எதிரிக்கு எதிரி நண்பனாகி விடு கின்றனர். ஒரு சமுதாயத்தை நமக்குப் பிடிக்கவில்லை என்றால் அந்தச் சமுதாயத்தை யார் எதிர்க்கிறார்களோ அவர்கள் நமக்கு நண்பர்கள் என்ற இந்தப் போக்கை நாம் விட்டு விட வேண்டும். இன்னும் சில நாடுகள் அமெரிக்கா மூலம் தங்களுக்குச் சில நன்மைகள் கிடைக்கும். இஸ்ரேல் மூலம் சில நன்மைகள் கிடைக்கும். ராணுவத் தளங்களைத் தருகிறார்கள். இராணுவத் தொழில் பற்றி கற்றுத்தருகிறார்கள். எனவே நாம் இஸ்ரேலுக்கு விசுவாசமாய் இருக்க வேண்டும் என்று சிலர் எண்ணுகிறார்கள். ரவுடிகள் சில நன்மைகளைச் செய்வதற்காக அந்த ரவுடியை உலகத்தில் யாராவது ஆதரிப் பார்களா? அது போன்று தான் உலகத் தில் ரவுடித்தனம் செய்து கொண்டிருக்கக் கூடிய அமெரிக்காவுக்குப் பயந்து உலக நாடுகள் மௌனமாக இருப்பதும், அவர்களை ஆதரிப்பதும் ஆபத்தானது.

### முஸ்லிம் நாடுகளின் பொறுப்புகள்

ஏன் அமெரிக்காவுக்குப் பின்னால் போகின்றீர்கள்? அமெரிக்கா உங்களுக்கு என்ன செய்கிறது? உங்கள் பணத்தை வாரி வாரிக் கொடுக்கின்றீர்கள். அவர்கள் காலம் கடந்த ஆயுதங்களை எல்லாம் உங்கள் தலையில்

கட்டுகிறார்கள். அதனை ரிப்பேர் செய்வதற்கு ஒரு பெரிய தொகையை உங்களிடம் வாங்கிக் கொள்கிறார்கள். உங்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு ஆள்கள் இல்லை. அதில் ஒரு தொகை உங்களிடம் வாங்கலாம்.

என்றைக்காவது உங்களைக் காப்பாற்றி இருப்பார்களா? இன்றைக்கு ஈரான் குண்டு போட்டது. யார் காப்பாற்றினார்கள்? அமெரிக்க உங்களைக் காப்பாற்றியதா?' உங்களைக் காப்பாற்ற அவர்கள் வரவில்லை. உங்கள் பெட்ரோல் கிடங்கில் தீ எரிய, அதைக் காப்பாற்றுவதற்காக அமெரிக்கா வந்ததா? இல்லை. அவர்களுடைய குறி எல்லாம் இஸ்ரேலைக் காப்பாற்றுவதுதான் அவர்கள் கொடுக்கின்ற ஆயுதங்களை அவர்கள் அனுமதி இல்லாமல் நீங்கள் பயன்படுத்த முடியாது. குறிப்பாக இஸ்ரேல் மீது நீங்கள் பயன்படுத்த முடியாது.

**எதிரி ஷியாவா சன்னியா என்று பார்ப்பதில்லை. முஸ்லிம்கள் என்றுதான் பார்க்கிறார்கள். 'நம்முடைய எதிரி ஈரான். ஈரானை அழித்துவிட்டால் இஸ்ரேலைக் காப்பாற்றி விடலாம்.' என்பதுதான் அவர்களுடைய இலக்கு.**

எல்லாவற்றுக்கும் ஒரே ஒரு காரணம்தான். மன்னராட்சியைக் காப்பாற்ற வேண்டும். மன்னராட்சியின் சுகபோகமான வாழ்க்கை வாழும் அவர்களை யாரும் கேள்வி கேட்கக்கூடாது. மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய எண்ணெய் வருமானம் அவர்களின் குடும்பத்திற்குப் போய்ச் சேர்கிறது. இந்த சுகத்தை விட்டு அவர்களால் வெளியே வர முடியவில்லை.

மக்கள் ஆட்சியைக்கொண்டு வாருங்கள். மக்கள் உங்களைக் காப்பாற்றுவார்கள். இன்றைக்கு ஈரானில் இவ்வளவு நடந்தும் அங்குள்ள ஆட்சியை மக்கள் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். துருக்கியில் அமெரிக்கா குழப்பத்தை ஏற்படுத்தியது. ஆனால் எர்தோகானுக்கு ஆதரவாக லட்சக் கணக்கான மக்கள் தெருவில் வந்து அந்த ஆட்சியைக் காப்பாற்றினார்கள். அதே போல அவர்கள் மக்களாட்சிக்கு மாற வேண்டும். இதில்தான் உங்கள் நாட்டினுடைய வளர்ச்சி இருக்கிறது. எந்த நாட்டில் எதேச்சதிகாரம் இருக்கிறதோ எந்த நாட்டில் தட்டிக்கேட்கின்ற உரிமை பறிக்கப்படுகிறதோ அந்த நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லாது என்பது உலக வரலாறு தருகின்ற உண்மை.

இந்த சுகபோக வாழ்க்கை நீங்கள் வாழ்ந்து கொண்டிருந்தால் இறுதி வரை நீங்கள் அடிமைகளாகத்தான் இருப்பீர்கள்.

### முஸ்லிம்களின் பொறுப்புகள்

இந்த பிரச்னையை ஷியா கண்ணோட்டத்தில் பார்க்காதீர்கள். ஷியாக்களுக்கும் சன்னிகளுக்கும் இடையே கோட்பாட்டு ரீதியாக மிகப் பெரும் வேறுபாடுகளும் இடைவெளிகளும் இருக்கின்றன என்பது உண்மைதான். ஷியாக்கள் சன்னிகளின் பல கோட்பாடுகளை மதிப்பதில்லை இழிவுபடுத்தக் கூட செய்கிறார்கள்.

ஆனால் அதைப் பேசுகிற நேரம் இது வல்ல. எதிரி ஷியாவா சன்னியா என்று பார்ப்பதில்லை. முஸ்லிம்கள் என்றுதான் பார்க்கிறார்கள். 'நம்முடைய எதிரி ஈரான். ஈரானை அழித்துவிட்டால் இஸ்ரேலைக் காப்பாற்றி விடலாம்' என்பதுதான் அவர்களுடைய இலக்கு. இதைப் புரிந்து கொள்ளாமல் சில சகோதரர்கள் எந்தச் சமயத்தில் எதைப் பேசக் கூடாதோ அந்தச் சமயத்தில் அதைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

உலக மக்களோடும் உலக நாடுகளோடும் கைகோர்த்துக் கொண்டு யார் யாரெல்லாம் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறார்களோ அவர்களோடு நாம் கைகோர்த்துக் கொண்டு அமெரிக்க இஸ்ரேலிய ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டும். நாம் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்போம். மனித குலத்தைப் பாதுகாப்போம்!

● சேயன் இப்ராகிம்



# சாகித்ய அகாடமி விருது வரலாற்றில் தடம் பதித்த தமிழ்ச் செல்வன்

2025ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருது எழுத்தாளர் எஸ்.தமிழ்ச் செல்வனுக்கு அவர் எழுதியுள்ள 'தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்' என்ற நூலுக்காக வழங்கப்பட்டுள்ளது. இந்த உயரிய விருதைப் பெறுவதற்கு அவர் முற்றிலும் தகுதியானவர். அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் மட்டுமல்ல; மிகச் சிறந்த சிந்தனை யாளரும் ஆவார். அரசியல், சமயம், இலக்கியம், கலை, பண்பாடு, கலாச் சாரம் என அனைத்து விஷயங்களிலும் அவருக்கு ஒரு தெளிவான பார்வை இருந்தது.

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் தனது பாடல்களால் மக்களைத் தட்டி எழுப்பிய மதுரை மதுரகவி பாஸ்கரதாஸ் அவர்களின் மகள் வழிப் பேரனே தோழர் தமிழ்ச் செல்வன். 1937ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த முதல் பேசும் படமான காளிதாஸ் திரைப்படத்தின் பாடல்களை மதுரகவி பாஸ்கரதாஸ் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்ச்செல்வனின் தந்தையார் சண்முகமும் ஒரு சிறந்த எழுத்தாளர். அவர் 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். தமிழ்ச்செல்வனின் உடன் பிறந்த சகோதரர்கள் கோணங்கியும் முருகபூபதியும் சிறந்த எழுத்தாளர்களே! எனவே ஒரு பாரம்பர்யப் பெருமைமிக்க இலக்கியக் குடும்பத்திலிருந்து வந்தவரே தோழர் தமிழ்.

தமிழ்ச்செல்வன் இதுவரை 60க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். அவர் எழுதிய 'அரசியல் எனக்குப் பிடிக்கும்' என்ற சிறுநூல் ஒரு லட்சத்திற்கும் மேற் பட்ட பிரதிகள் விற்று புத்தக உலகில் சாதனை படைத்துள்ளது. அவரின் பிற அரசியல் வரலாற்று நூல்களான 1806 வேலூர் புரட்சி, திருநெல்வேலி வரலாற்று

அசைவுகள், 1947, எது கலாச்சாரம் ஆகிய நூல்களும் அளவில் சிறிதாயினும், அவற்றில் ஆதாரப்பூர்வமான பல வரலாற்றுச் செய்திகள் கொட்டிக் கிடக்கின்றன.

அவர் எழுதிய பேசாத பேச்செல்லாம் என்ற நூல் நான் மிகவும் விரும்பிப் படித்த நூலாகும். ‘தான் எழுதிய நூல்களுள் தனக்குப் பிடித்தமானது பேசாத பேச்செல்லாம் என்ற நூலே’ என அவர் விருது அறிவிப்புக்குப் பிறகு நியூஸ் 18 தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நூலில் அவர் தனது வாழ்க்கையில் சந்தித்த சாதாரணமான ஆனால் சற்று வித்தியாசமான நபர்கள் குறித்து எழுதியுள்ளார். சிலரைப் பற்றி அவர் எழுதியுள்ள குறிப்புகள் உள்ளத்தை நெகிழச் செய்யும் வண்ணம் இருக்கின்றன.




அவரது முதல் சிறுகதைத் தொகுதியான ‘வெயிலோடு போய்’ அவர் பிறந்து வளர்ந்த சாத்தூர் பகுதி கிராமங்களிலுள்ள பீடி சுற்றுகின்ற தீப்பெட்டிக்கு லேபிள் ஒட்டுகின்ற பட்டாசு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மிக எளிய மக்களின் அவல வாழ்க்கையை விவரிக்கின்றது. இதிலும், அவரது வேறு சில சிறுகதைத் தொகுதிகளிலும் சமுதாயத்தின் விளிம்பு நிலையில் இருக்கின்ற மக்களின் வாழ்க்கையைப் பற்றியே எழுதுகிறார். அவரது கதைகளில் எந்தவிதமான விரசமும் இருக்காது. பெண்களைப் பற்றிய வர்ணனைகள் இருக்காது. வெயிலோடு போய் என்ற அவரின் சிறுகதையை இயக்குநர் சசி ‘பூ’ என்ற பெயரில் திரைப்படமாக எடுத்தார். அது ஒரு சிறந்த படமாகப் பலராலும் பாராட்டப்பட்டது.

தோழர் தமிழ், அஞ்சல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த போது தொழில் சங்க நடவடிக்கைகளிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அஞ்சல் மூன்றாம் பிரிவு ஊழியர் சங்கத்தின் அம்பாசமுத்திரம் கிளைச் செயலாளராகப் பொறுப்பு வகித்த போது பெற்ற அனுபவங்களைத் தொகுத்து ‘ஜிந்தாபாத்! ஜிந்தாபாத்’ என்ற நூலை எழுதினார். தமிழக அரசு முனைப்புடன் முன்னெடுத்துச் சென்ற அறிவொளி இயக்கத்தில் இணைந்து சில ஆண்டுகள் பணியாற்றினார். தனது அறிவொளி இயக்க அனுபவங்களைத் தொகுத்து இருளும் ஒளியும் என்ற நூலை எழுதினார்.

அவர் பொதுவுடமைக் கொள்கையில் மாறாப் பற்றுறுதி கொண்டிருந்தார். பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். அக்கட்சியின் மாநிலக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகிக்கிறார்.

அக்கட்சியின் இலக்கியப் பிரிவான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவராகப் பல்லாண்டு பொறுப்பு வகித்தார். செம்மலர் மாத இதழின் ஆசிரியராகவும், புத்தகம் பேசுது மாத இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் பொறுப்பு வகித்து வருகிறார்.

நானும் அஞ்சல் துறையில் பணியாற்றியவன் என்ற முறையில், கடந்த 1979ஆம் ஆண்டு முதல் அவரை நான் நன்கறிவேன். 1979 - 1983களில் நான் கோவில்பட்டி அஞ்சல் கோட்டத்தில் பணியாற்றியபோது அவருடன் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறேன். போராட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கிறேன். எனது மூன்று நூல்களுக்கு அவர் மதிப்புரை வழங்கிப் பாராட்டியிருக்கிறார். அவருடன் அறிமுகமும், தோழமையும் இன்றுவரை தொடர்கிறது. அண்மையில் வெளிவந்த அவரின் ஒன்றிரண்டு நூல்களைத் தவிர, பிற அனைத்து நூல்களையும் நான் வாசித்திருக்கிறேன்.

விருது பெறும் தோழர் தமிழை, சமரசம் ஆசிரியர் குழுவினருடன் இணைந்து நானும் வாழ்த்துகிறேன். அவரது இலக்கியப் பணி தொடரவும் வாழ்த்துகிறேன்.



# அவனின்றேல் நீ இல்லை!

- அஷ்ஷெய்க்
A.C. அகார் முஹம்மது

**‘நாங்கள் உங்களை உறுதிப்படுத்தவில்லை என்றால்...’**

**‘நாங்கள் அவளுடைய இதயத்தை உறுதிப்படுத்தவில்லை என்றால்..’**

**‘அல்லாஹ்வின் அருளும் அவன் கருணையும் உங்கள் மேல் இல்லையென்றால்..’**

**‘என் இறைவனின் அருள் இல்லையென்றால்...’**

**‘அவனுடைய இறைவனிடமிருந்து வந்த அருள் அவனை அடையவில்லை என்றால்..’**

மேற்கண்டவை திருக்குர்ஆனின் சில வரிகள்.

உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும், ஏன் ஒவ்வொரு மூச்சிலும் கூட நீங்கள் ஓர் உண்மையை ஆழமாக உணர்வீர்கள்: ‘இறைவன் இல்லையெனில், நீங்கள் உண்மையில் ஒன்றுமில்லை.’

ஒரு மனிதன் தான் அடையும் ஒரு வெற்றியாக இருக்கலாம், மற்றொரு சாதனையாக, அடைவாக இருக்கலாம். அவை ஒவ்வொன்றும் தனது சொந்த உழைப்பின் பலன் என்று கருதி அவன் பெருமிதம் கொள்ளலாம். ஆனால் ஆழ்ந்து சிந்தித்தால் அந்த வெற்றிகளுக்குப் பின்னாலும், சாதனைகள் அடைவுகளுக்குப் பின்னாலும் ஒரு பேராற்றல் இருப்பதை உணர முடியும். அந்த உண்மையைத்தான் மேலே நாம் கண்ட திருக்குர்ஆன் வாசகங்கள் கூறுகின்றன.

***‘நாங்கள் உங்களை உறுதிப்படுத்தவில்லை என்றால்...’***

என்ற வாசகம், இறைவனின் உதவி இல்லையெனில் மனிதன் எத்துணை எளிதாகத் திசை தவறி போய்விடக் கூடும் என்பதை உணர்த்துகிறது. கொண்ட கொள்கையிலும், கடைப்பிடித்து வரும் விழுமியங்களிலும் ஒரு மனிதன்

> வாழ்வின் சோதனைக் காலங்களில் மனம் தளரும் போது, 'இந்த மூச்சையும், இந்த இதயத் துடிப்பையும் அவன் இன்னும் எனக்கு வழங்கிக் கொண்டிருக்கிறான் என்றால், அவன் என்னைக் கைவிடவில்லை' என்ற நம்பிக்கைதான் ஓர் இறைவிசுவாசியை வழிநடத்துகிறது.

உறுதியாக நிற்பது அவனது தனிப்பட்ட திறமை அல்ல; அது இறைவன் அவனுக்கு வழங்கிய அருளாகும். சோதனைகள் வரும்போது கால்கள் தடுமாறாமல் இருப்ப தற்கும், மனசாட்சி பிறழாமல் இருப்ப தற்கும் இறைவனின் பிடி மிக அவசிய மானது.

*'நாங்கள் அவளுடைய இதயத்தை உறுதிப்படுத்தவில்லை என்றால்...'*

இறைத்தூதர் மூஸா(அலை) அவர்களின் தாயாரின் வரலாற்றை நினைவுபடுத்தும் இந்த வரிகள், உணர்ச்சிக் கொந்தளிப்பான நேரங்களில் மனித உள்ளங்கள் எவ்வளவு பலவீனமானவை என்பதைக் காட்டுகின்றன. பயம், கவலை, துக்கம் ஆகியவை ஒரு மனிதனை ஆட்கொள்ளும் போது, அவனை நிலைகுலையாமல் பாதுகாப்பது இறைவனே! உள்ளங்களை மாற்றுபவனும், அவற்றுக்கு அமைதியை வழங்குபவனும் இறைவன் ஒருவனே! அவன் அந்த உறுதியை வழங்க வில்லை எனில், மனிதன் மன அழுத்தத்தி னால் அழிந்து விடுவான்.

*'இறைவனின் அருளும் அவன் கருணை யும் உங்கள்மேல் இல்லையென்றால்...',*

*'என் இறைவனின் அருள் இல்லையென்றால்...'*

இந்த வரிகள் வாழ்வின் பொதுவான தத்து வத்தைக் கூறுகின்றன. நாம் செய்யும் தவறு களுக்காக நாம் தண்டிக்கப்பட்டிருந்தால், இந்த உலகில் வாழும் தகுதியை நாம் எப்போதோ இழந்திருப்போம். ஆனால் இறைவனின் அருள் நம் பாவங்களை மறைக்கிறது; நம் குறைகளை நிவர்த்தி செய்கிறது. நாம் சந்திக்கும் விபத்துகளில் இருந்து தப்புவதும், கொடிய நோய்களில் இருந்து மீள்வதும் அவ னது கருணையின் அரவணைப்பால் மட்டுமே சாத்தியமாகிறது.

வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும், நாம் சுவாசிக்கும் ஒவ்வொரு மூச்சும் இறைவனின் அருட்கொடையே! நாம் விழித்திருப்பதும், உறங்குவதும், சிந்திப்பதும் அவனது ஆணைப்படியே நடக்கின்றன.

*'அவனுடைய இறைவனிடமிருந்து வந்த அருள் அவனை அடையவில்லை என்றால்...'* அவன் வீசி எறியப் பட்டிருப் பான்.

ஒரு மனிதன் அடையும் செல்வம், கல்வி, பதவி அனைத்தும் இறைவனின் அருள் அவனை வந்தடைந்ததால்தான் சாத்திய மானது. எனவே நீங்கள் தனித்து ஒன்று மில்லை; எதுவும் இல்லை. இறைவன் இல்லை யெனில், நீங்கள் உண்மையில் ஒன்றுமில்லை.

இந்த வரிகள் மனிதனின் ஆணவத்தை உடைத்து, அவனைப் படைத்தவனிடம் சரண டையச் செய்கிறன. மனிதன் எவ்வளவுதான் முன்னேறினாலும், இயற்கையின் சீற்றத்திற்கும், மரணத்திற்கும் முன்னால் அவன் ஒன்றுமில்லாத வன் ஆகிறான். அவனது இருப்பு(Existence), அவனது அறிவு(Knowledge), அவனது ஆற்றல் (Power) அனைத்தும் அந்த ஏக இறைவனிடம் இருந்து கடன் வாங்கப்பட்டவை.

வாழ்வின் சோதனைக் காலங்களில் மனம் தளரும் போது, 'இந்த மூச்சையும், இந்த இதயத் துடிப்பையும் அவன் இன்னும் எனக்கு வழங்கிக் கொண்டிருக்கிறான் என் றால், அவன் என்னைக் கைவிடவில்லை' என்ற நம்பிக்கைதான் ஓர் இறைவிசுவாசியை வழிநடத்துகிறது.

# நன்றி கெட்டவர்களின் கதி

**மேலும், அவர்களுக்கும் நாம் அருட்பேறுகளை வழங்கியிருந்த ஊர்களுக்கு மிடையில் எல்லோருக்கும் தெரியும்படியான ஊர்களை அமைத்திருந்தோம். அவற்றில் பயண தூரத்தை அளவிட்டு நிர்ணயித்திருந்தோம்.[31] 'பயணம் செய்யுங்கள் இவ்வழிகளினூடே; இரவு பகல் முழுவதும் அச்சமற்றவர் களாய்!' ஆயினும், அவர்கள் கூறினார்கள்: 'எங்கள் இறைவனே! எங்களின் பயண தூரத்தை நீளமாக்கித் தருவாயாக!'[32] அவர்கள் தமக்குத் தாமே அநீதி இழைத்தார்கள். இறுதியில் அவர்களை நாம் வெறும் பழங்கதை களாக்கி விட்டோம். அவர்களை முற்றிலும் சின்னாபின்னமாக்கிச் சிதறடித்து விட்டோம்.[33] ஒவ்வொரு பொறுமைசாலிக்கும் நன்றி உடையவருக்கும் இதில் திண்ணமாக சான்றுகள் உள்ளன.[34]**

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 18, 19**

**31.** அருட்பேறுகள் பெற்ற ஊர்கள் என்பது சிரியாவையும் ஃபலஸ்தீனையும் உள்ளடக்கிய பகுதியைக் குறிக்கும். மகத்துவம் மிக்கக் குர்ஆனில் இந்தப் பகுதியைக் குறித்துதான் அருட்பேறு பெற்ற பகுதியாக பல முறை குறிப்பிடப்பட்டுள்ளது. (எடுத்துக் காட்டாக பார்க்க: திருக்குர்ஆன் 7:137; 17:1; 21:71,81)

அருட்பேறுகள் பெற்ற ஊர்கள் என்பது எங்கோ மூலைகளில் மறைந்திராமல் எளிதில் அடையத்தக்க வகையில் நெடுஞ்சாலைகளில் அமைந்திருக்கின்ற நகரங்களைக் குறிக்கும். மேலும் ஊர்களுக்கிடையிலான தொலைவு நீளமானதாக இராமல் ஒரு ஊரின் எல்லை முடிந்ததுமே அடுத்த ஊரின் எல்லை தொடங்கிவிடுகின்ற வகையில் அடுத்தடுத்து அமைந்த ஊர்கள் என்றும் பொருள் கொள்ளலாம்.

'பயண தூரத்தை அளவிட்டு நிர்ணயித்திருந்தோம்' என்பது ஏமனிலிருந்து சிரியா வரையிலான ஒட்டுமொத்த பயணமும் மக்கள் வசிப்பிடங்களின் ஊடாகவே இருக்கும் என்பதையும் ஒரு ஊருக்கும் அடுத்த ஊருக்கும் இடையிலான பயண தூரம் ஏற்கனவே வரையறுக்கப்பட்டு, மக்கள் மத்தியில் நல்ல முறையில் அறிமுகமாகியிருந்ததையும் குறிக்கும். மக்கள் வசிக்கின்ற பகுதிகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பயணத்துக்கும் மக்கள் வசிக்காத பகுதிகளின் வழியாகப் பயணிப்பதற்கும் இதுதான் வேறுபாடு.

பாலைவனத்தில் பயணிப்பவர்கள் எத்துணை தொலைவு வேண்டுமானாலும் பயணித்துக் கொண்டே இருக்கின்றார்; களைத்துப் போகின்ற போது அந்த இடத்திலேயே கூடாரமிட்டு தங்கிக்கொள்கின்றார். ஆனால் இதற்கு நேர்மாறாக மக்கள் வசிப்பிடங்கள் வழியாக பயணிப்பவருக்குப் பாதை நெடுக என்னென்ன ஊர்கள் இருக்கின்றன என்பதும் அவற்றுக்கிடையிலான பயணதூரம் என்னவென்பதும் நன்கு தெரிந்திருக்கும். பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பே எந்த ஊரில் தங்குவது, எங்கு எத்துணை நேரம் இளைப்பாறுவது, எங்கு மதியப் பொழுதைக் கழிப்பது, எங்கு இரவு தங்குவது என எல்லாவற்றையும் முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ள முடியும்.

29 ஆம் பக்கம் பார்க்க...

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# வட்டியின் இழிவான முடிவு

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'வட்டியின் மூலமாக ஈட்டப்படுகின்ற பொருள் என்னதான் அதிகமாகத் தோன்றினாலும் அதன் முடிவு பற்றாக்குறை யிலும் தட்டுப்பாட்டிலும் போதாமையிலும் இல்லாமையிலும்தான் முடியும்.'**

**அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரலி)**
**நூல் : முஸ்னத் அஹ்மத், இப்னு மாஜா, பைஹகி**

வட்டிப் பணத்தை விழுங்குகின்றவருக்கு வட்டியின் மூலமாக மிகப் பெரும் அளவில் பணமும் இலாபமும் கிடைப்பதாக மேம்போக்காகப் பார்க்கும்போது தோன்றலாம். ஆனால் அதன் இறுதி முடிவு எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும் நன்மையானதாய் இருக்காது. இதனைத்தான் குர்ஆன் 'அல்லாஹ் வட்டியை அழித்துவிடுகின்றான்; இன்னும் தான தர்மங் களை வளரச் செய்கின்றான்' (2: 276) எனத் தெளிவுபடுத்துகின்றது.

தானதர்மங்களைச் செய்வதில்தான் வளர்ச்சி, முன்னேற்றம், செழிப்பு, நன்மை, வளம் என எல்லாமே இருக்கின்றன. வட்டியின் மூலமாக வளர்ச்சியும் இருக்காது, செழிப்பும் நன்மையும் வளமும் இருக்காது. தானதர்மங்களில் ஈடுபடுகின்றவர்களின் பங்குக்கு இறைவனின் உவப்பும் மறுமையின் நற்கூலிகளும் கிடைக்கின்றன. வட்டியைத் உண்கின்றவர்களின் விதியிலோ இறைவனின் சாபமும் கோபமும்தாம் விதிக்கப்பட்டுவிட்டன. வட்டியினால் ஏற்படுகின்ற கேடுகள் இந்த உலக வாழ்விலேயே சில சமயம் கண்கூடாக வெளிப்படுகின்றன.

பெரும் பெரும் முதலாளிகள் ஏதுமில்லாதவர்களாய், திவாலாகிப் போனவர்களாய் வீதிக்கு வந்துவிட்ட கோலத்தை இந்த உலகம் பார்த்திருக்கின்றது. அது மட்டுமல்ல, வட்டி விழுங்கிகளுக்கு உண்மையான மதிப்போ, மரியாதையோ கிடைக்காமலே போய்விடுகின்றது. மனித மாண்பும் கண்ணியமும் மரியாதையும் அவர்களுக்கு வசப்படாமலே போய்விடுகின்றது. சமூகத்தில் அவர்களுக்கு இருக்கின்ற அந்தஸ்தும் தகுதிநிலையும் மிருகங்களைவிடக் கீழானதாக இருக்கிறது.

இன்றைய காலத்தில் ஒட்டுமொத்த பொருளாதாரக் கட்டமைப்பும் வட்டியின் அடிப் படையில்தான் பின்னப்பட்டுள்ளது. அதன் கோர விளைவுகளை இந்த உலகம் நாள்தோறும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது. வட்டியின் அடிப்படையிலான இந்தப் பொருளாதாரக் கட்டமைப்பு ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கோ, நாட்டுக்கோ மட்டுமே சாபக்கேடாக இருக்கவில்லை. ஒட்டுமொத்த உலக மக்களுக்கே மிகப் பெரும் சாபக்கேடாக பேருருவம் எடுத்துள்ளது.

வட்டியின் சாபக்கேட்டின் விளைவாக எத்தனையோ நாடுகளும் சமூகங்களும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி சின்னாபின்னமாகியிருக்கின்றன. வட்டியை உண்கின்ற நாடுகளின் கிடுக்கிப் பிடியில் சிக்கி தம் நாட்டின் கொள்கைகளையும் அரசியல் நிலைப் பாடு களையும் வெளியுறவுக் கொள்கைகளையும் தாமாக வகுத்துக்கொள்கின்ற உரிமையையும் சுதந்திரத்தையும் இழந்து நிற்கும் நாடுகள்தாம் எத்தனை..! எத்தனை..!

பொருள் முதல்வாதத்தின் உச்சகட்டம்தான் வட்டி அடிப்படையிலான பொருளா தாரத் திட்டம். இந்தத் திட்டத்தின் கைங்கர்யத்தால்தான் முதலாளிகளின் முதலும் பணமும் தொடர்ந்து இடைவிடாமல் வளர்ந்தோங்கிக் கொண்டே போகின்றது; பாமர மக்களோ

**நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா**

மேன்மேலும் ஏழ்மையாகிக் கொண்டே போகின்றார்கள். ஒட்டுமொத்த வணிகமும் இந்த முதலாளிகளின் கிடுக்கிப்பிடியில் சிக்கி விடுகின்றது. பொருள்களின் விலையை இந்த முதலாளிகள்தாம் நிர்ணயிக்கின் றார்கள். விலைவாசி எந்த அளவுக்கு உயர்ந்து கொண்டே போய்விடுகின்றது எனில் அரசாங் கங்களாலும்கூட அவற்றைக் கட்டுப்படுத்த இயலாமல் போய்விடுகின்றது. இது எங்கே போய் முடியும்? இதன் இயல்பான விளைவாக மக்கள் மத்தியில் அதிருப்தி அதிகமாகும்.

கொள்ளை, திருட்டு, சூறையாடல் ஆகி யவை மேன்மேலும் அதிகமாகிக் கொண்டே போகும் என்பதில் ஐயம் இல்லை. உலக மோகமும் உலக வேட்கையும் போட்டி போடுகின்ற சமூகச் சூழலில் சமூகத்தின் எல்லாத் தரப்பிலும், எல்லா இடங்களிலும் எல்லா வடிவங்களிலும் ஊழலும் முறைகேடு களும் அங்கிங்கெனாதபடி நீக்கமற நிறைந்து விடும். இந்த வாய்ப்புக்கேடான நிலைமை யின் பாதிப்பிலிருந்து எவராலும் தப்பிவிட முடியாது. முதலாளித்துவ வர்க்கமும் இதற்கு இலக்காகி விடுகின்றது. சுருங்கச் சொல்ல வேண்டுமெனில் மோசடி செய்தும் கொடூரமான வழிமுறைகளைக் கையாண்டும் எத்துணை பெரிய அளவில் செல்வத்தை ஈட்டிக் குவித் தாலும் அதனை எந்தக் காலத்திலும் மனிதர் களின் வெற்றி, வளவாழ்வு ஆகியவற்றின் வெளிப்பாடாக எடுத்துக்கொள்ளவே முடியாது.

இன்றைய உலகத்தில் வங்கிகள் ஒரு தவிர்க்க முடியாத தேவையாய் ஆகியிருக் கின்றன. வட்டி இல்லாமல் வங்கிகளை நடத்துவது எப்படிச் சாத்தியமாகும் என இங்கு கேள்வி எழலாம். ஆனால் பொருளா தார வல்லுநர்கள் விரும்பினால் வட்டிக்குப் பதிலாக முஸாரபத், முஷாரகத் ஆகிய இஸ்லாமியக் கொள்கைகளின்படி இயங்கு கின்ற வங்கிகளை நடைமுறைப்படுத்த முடியும். இந்த இஸ்லாமியக் கொள்கைகளை மேற் கொண்டு வட்டி இல்லாமல் வங்கிகளை மிக எளிதாக நடத்த முடியும்.

எடுத்துக்காட்டாக சிலர் ஒன்று சேர்ந்து ஒரு நிறுவனத்தைத் தொடங்கலாம். இந்த நிறுவனத்தில் பங்குதாரர்களின் பணம் ஒன்று திரட்டப்படலாம். இவற்றைப் பாதுகாப்பாய் வைத்திருந்து தேவைப்படும் நேரத்தில் கடன் தொகைகளையும் வழங்கலாம். இந்த நிறுவனம் வருவாயைப் பெருக்கிக் கொள் வதற்காக முஷாரகத்தில் ஈடுபடலாம். அதா வது வேளாண்மை, வணிகம், கட்டிடத் தொழில், கனரகத் தொழில், சிறுதொழில் போன்ற களங்களில் எங்கிருந்தெல்லாம் இலாபம் கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்பு இருக்கின்றனவோ அவற்றில் முதலீடு செய் யலாம். ஆண்டின் இறுதியில் கணக்குப் பார்த்து பங்குதாரர்களுக்கு அவர்களுக்குச் சேர வேண்டிய இலாப விகிதத்தைச் சேர்த்து விடலாம். இந்த நிறுவனத்தின் கிளைகளை நாட்டின் பல்வேறு நகரங்களில் நிறுவி விட லாம். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ரொக்கப்பணத்தை மாற்றுவதற்கான ஏற்பாட் டையும் இதன் மூலமாகச் செய்துவிடலாம்.

இதே போன்று வட்டி, சூதாட்டம் ஆகியவற்றிலிருந்து அப்பாற்பட்ட காப்பீடு பாலிஸிக்கான ஏற்பாட்டையும் செய்யலாம். திடீரென்று நிகழ்ந்துவிடுகின்ற தற்செயலான விபத்து போன்றவற்றால் ஏற்படுகின்ற இழப்புகளை ஈடுகட்டுவதுதான் காப்பீடு பாலிஸியின் அடிப்படை நோக்கம் ஆகும். இந்த நோக்கத்துடன் சிலர் ஒன்று சேர்ந்து கூட் டாகப் பணத்தைப் போட்டு நிதியம் ஒன்றை அமைத்துக் கொள்ளலாம். இதில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விகிதத்தில் இவர்கள் அனைவரும் தத்தமது பணத்தை இந்த நிதியத்தில் சேர்த்து வரலாம்.

இந்த நிலையில் தீ விபத்தினாலோ, வாகன விபத்துகளினாலோ அல்லது வேறு ஏதேனும் ஓர் விபத்தினாலோ இவர்களில் ஒருவருக்கு இழப்பு ஏற்படுமேயானால் அவர் தம்முடைய இழப்பை ஈடு செய்வதற்குப் போதுமான பணத்தை இந்த நிதியத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம். இந்த நிதியத்தில் அவர் இது வரை சேர்த்த பணத்தைவிட அதிகமாக பணத் தேவை ஏற்பட்டுவிட்டதெனில் அவருக்குக் கூடுதல் பணம் கடனாகத் தரப்படலாம். அதனை அடைப்பது அவர் மீதான பொறுப்பாகும்.

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

**32.** இது அவர்கள் வாய் விட்டுச் செய்த பிரார்த்தனையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. உண்மை என்னவெனில் எவரெல்லாம் இறைவனிடமிருந்து அருட்கொடைகளைப் பெற்ற பிறகு நன்றிகெட்டதனமாக நடந்துகொண்டு இறைவனுக்கு மாறு செய்கின்றாரோ அவருடைய நிலைமை, 'இறைவா! நீ வழங்கிய அருட்கொடைகளுக்கு நான் தகுதியானவன் அல்லன்!' என்று அவர் சொல்வதற்கு ஒப்பானதாகும். மேலும் இதே போன்று எந்தச் சமூகம் இறைவனின் அருள்வளங்களைத் தவறாகப் பயனீட்டுகின்றதோ அதனுடைய நிலைமையும், 'இறைவா! இந்த அருள்வளங்களை எங்களிடமிருந்து பறித்துக் கொள். நாங்கள் அதற்குத் தகுதியானவர்கள் அல்லர்' என்று அந்தச் சமூகம் தன்னுடைய அதிபதியிடம் பிரார்த்திப்பதற்கு ஒப்பானதாகும்.

போதாக்குறைக்கு, ஸபா நாட்டு மக்கள் தங்களின் மக்கள்தொகை அதிகமாகப் பெருகிவிட்டது குறித்து கவலைப்பட்டவர்களாய் அதனைச் சுமையாகக் கருதத் தொடங்கியிருக்க வேண்டும் என்பதையும், மேலும் மற்ற அறியாத சமூகத்தாரைப் போன்றே அவர்களும் பெருகிவரும் மக்கள் தொகையை தமக்கான ஆபத்தாக நினைத்தவர்களாய் மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்க வேண்டும் என்பதையும் 'எங்கள் இறைவனே! எங்களின் பயண தூரத்தை நீளமாக்கித் தருவாயாக!' என்கிற சொற்கள் உணர்த்துகின்றன.

**33.** ஸபா சமூகம் எந்த அளவுக்குச் சீரழிந்து சின்னாபின்னமாய்ச் சிதறியது எனில் அது சிதறிப் போன வரலாறு மக்கள் மத்தியில் பழமொழியாய் உருவாகி உறைந்துவிட்டது. இன்றும் அரபு மக்கள் ஏதேனுமொரு சமூகக் குழு சிதறிப் போனதைக் குறிப்பிட வேண்டிய தேவை வருகின்ற போது 'தஃப்ரகூ அய்தி ஸபா' - 'அவர்கள் ஸபா சமூகத்தார் சீரழிந்து சிதறியதைப் போன்று சிதறிப் போனார்கள்' என்று சொல்வார்கள்.

வல்லோன் அல்லாஹ்விடமிருந்து அருள் வளங்கள் சுருங்கிக் கொண்டே போகத் தொடங்கிய போது ஸபா நாட்டின் வெவ்வேறு கோத்திரங்கள் தங்களின் நாட்டைத் துறந்து அரபுலகின் பல்வேறு பகுதிகளுக்கு குடிபெயரத் தொடங்கினார்கள். கஸ்ஸாயின்கள் ஜோர்தானுக்கும் சிரியாவுக்கும் குடி பெயர்ந்தார்கள். அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத் தார் யத்ரிப் சென்று குடியமர்ந்தார்கள்.

குஸாஆ கோத்திரத்தாரோ ஜித்தாவுக்குப் பக்கத்தில் திஹாமா என்கிற பகுதிக்குச் சென்று வசிக்கத் தொடங்கினார்கள். அஜ்து கோத்திரத்தாரோ உமான் பகுதிக்குச் சென்று குடியேறினார்கள். லக்கஹ்ம், ஜுதாம், கிந்தா ஆகிய கோத்திரத்தாரும் பிறந்த மண்ணைத் துறக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப் பட்டார்கள். எதுவரையெனில் ஸபா என்கிற பெயரில் ஒரு நாடு இருந்த சுவடே இல்லாமல் போய்விட்டது. கதைகளில் மட்டுமே குறிப்பிடப்படுகின்ற பெயராக அது தேங்கிவிட்டது.

**34.** இதற்கு முந்தைய, பிந்தைய வசனங்களைக் கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது இறைவனின் அருட்கொடைகளைப் பெற்றுக் கொண்ட பிறகு பூரித்துப் போய்விடாத, தன்னிலை இழந்துவிடாத, அகம்பாவத்துக்கோ, ஆணவத்துக்கோ ஆளாகிவிடாத, அவற்றையெல்லாம் அருளிய அந்த இறைவனை மறந்துவிடாத மனிதர்களும் சமூகக் குழுக்களும் தாம் இங்கு 'பொறுமைசாலிகளாகவும் நன்றி உடையவர்களாகவும்' குறிப்பிடப்படுகின்றார்கள் எனலாம். வளர்ச்சிக்கான, முன்னேற்றத்துக்கான, மகத்தான எழுச்சிக்கான வாய்ப்புகள் கிடைத்ததும் இறைவனுக்கு மாறு செய்யத் தொடங்கியதன் விளைவாக மிக மோசமான கதிக்கு ஆளான மனிதர்களின் நிலைமைகளிலிருந்து இப்படிப்பட்ட நல்லியல்புகளைக் கொண்ட மனிதர்களால்தான் படிப்பினை பெற முடியும்.

(தொடரும்)



# என் இனிய இளைஞர்களே..!

**- அப்துர் ரவூஃப் காலித்**

மனித வாழ்வில் ஒருமுறை மட்டுமே வரும் பருவம்தான் இளமை. மற்றெல்லாப் பருவநிலைகளை விட ஆற்றலிலும், ஆரோக்கியத்திலும் சிறந்ததும் உறுதி வாய்ந்ததும் இளமையெனும் பருவம்தான். இளமையெனும் ஆற்றலால்தான் சவால்கள் எதிர்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை வரலாறு நெடுகிலும் காணலாம். இஸ்லாம் இளமை எனும் அருள்மிக்க பருவத்தைப் போற்றிப் புகழ்கிறது. இறைவன் நமக்குக் கொடுத்த இளமைப் பருவம் என்பது முந்தைய பால்யம், பிந்தைய முதுமை என இரு பலவீனங்களுக்கிடையில் நமக்குக் கிடைத்த பலமாகும்.

திருமறையில் அல்லாஹ் கூறுகின்றான்: ‘நீங்கள் பலவீனமான நிலையிலிருந்தபோது உங்களைப் படைக்கத் தொடங்கியவன் அல்லாஹ்தான்! பிறகு அந்தப் பலவீனத்தை அடுத்து உங்களுக்கு வலிமையைத் தந்தான். பின்னர் அந்த வலிமையை அடுத்து உங்களைப் பலவீனர்களாகவும் முதியவர்களாகவும் ஆக்கினான். அவன் எதை நாடுகின்றானோ அதைப் படைக்கின்றான். மேலும், அவன் யாவற்றையும் அறிந்தவனாகவும், யாவற்றின் மீதும் ஆற்றலுடையவனாகவும் இருக்கின்றான்’ (திருக்குர்ஆன் 30:54)

இப்பருவத்தை ஒருவர் இழந்து விட்டால் இப்பொன்னான வாய்ப்பு மீண்டும் திரும்பி வராது. இன்றைய காலச் சூழலில் இளைஞர் சமுதாயம் தங்கள் ஆற்றல்களைத் தேவையற்ற காரியங்களில், பொழுதுபோக்குகளில் விரயமாக்கிக் கொண்டிருக்கின்றது.

நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ‘ஐந்து விஷயங்கள் வருவதற்கு முன் ஐந்து விஷயங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்; நோய்க்கு முன்பு ஆரோக்கியம், வறுமைக்கு முன்பு செல்வம், பணிக்கு முன்பு ஓய்வு, முதுமைக்கு முன்பு இளமை, மரணத்திற்கு முன்பு வாழ்வு’

மற்றுமொரு நபிமொழியில் இன்னும் ஐந்து விஷயங்களை நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ‘நாளை மறுமையில் ஐந்து கேள்விகளுக்கு மனிதன் பதில் சொல்லாத வரையில் அவன் அந்த இடத்தை விட்டு நகர முடியாது.

தனது வயதை எந்தச் செயல்களில் கழித்தான்?
தன் இளமையை எதில் பயன்படுத்தினான்?
செல்வத்தை எவ்வாறு சம்பாதித்தான்?
எவ்வாறு செலவழித்தான்?
கற்ற கல்வியின் படி எந்த அளவுக்குச் செயல் புரிந்தான்?

இளைஞர்களிடையே சரியான இஸ்லா மியக் கண்ணோட்டத்தை உருவாக்குவதும், கண்காணிப்பும் பயிற்சியும் எப்பொழுதும் அவசியமான ஒன்றாக இருக்கிறது.

பின்வரும் ஏழு விஷயங்களில் இளமைப் பருவத்தின் அருளும், ஆற்றலும் வீணடிக் கப்படுகிறது என்பது பற்றியும், அதற்கான காரணங்களையும் பார்க்கலாம்.

### 1. பலன் தராத கல்வி

இன்றைய காலத்தில் இளைஞர்களின் கல்வித்தரம் மிகவும் உயர்ந்திருக்கிறது. பல்வேறு துறைகளில் ஆற்றல்மிக்க இளைய சமுதாயம் உருவாகிக் கொண்டிருப்பது ஆரோக்கியமான ஒன்றாகும். ஆனால், கல்வி என்பது மனிதனை மனிதனாக, மனிதநேயம் உள்ளவனாக, சீரான நேரான வளர்ச்சி பெற்ற வனாக அவனை மாற்ற வேண்டும். அவனு டைய ஆளுமையை வெளிக்கொண்டு வரவேண்டும். அந்த ஆளுமை ஈமானில் தோய்த்து எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

வெறுமனே பொருள் சம்பாதிப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொண்ட கல்வியாக இருக்கக் கூடாது. நாம் கற்கும் கல்வி ஆன்மிகத்தையும், அறிவையும் ஒருங்கே பெற்றுத் தர வேண்டும். முன்மாதிரி மக்க ளாகவும், தலைவர்களாகவும் உருவாக்க வேண்டும். வெறுமனே பொருள் சேர்க்கும் இயந்திரங்களாக இளைஞர்கள் வாழ்வின் இலட்சியங்களைத் தொலைப்பதும் ஆளுமை களை மேம்படுத்தாத பருவமாகவும் இளமை தொலைந்து விடக்கூடாது.

நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வழிகாட்டி யிருக்கிறார்கள்: ‘இறைவா! பலனளிக்காத கல்வியிலிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.’

### 2. நேர்மையில்லாத செயல்

நவீன கால முன்னேற்றங்கள் மக்கள் அனைவரிடமும் குறிப்பாக இளைஞர்களிடம் உருவாக்கியிருப்பது பொருள் மீதான மோகம். மனித வரலாறு முழுவதும் இப் பண்பு காணப்பட்டிருந்தாலும், அனைத்து வாழ்வாதாரங்களையும் உடனுக்குடன் அனு பவித்து விட வேண்டும் எனும் பண்பை நவீன தொழில்நுட்பங்கள் அதிகப்படுத்தி விடுகின்றன. இதில் அதிகம் பாதிக்கப்படும் பருவம் இளமைதான். அதற்காக நேர்மை யின்றி செயலாற்றும் இளைஞர் சமுதாயம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

ஆனால், அல்லாஹ் நேர்மையின்மையைத் தடை செய்திருக்கின்றான். நேர்மையற்ற செயல்களில் எவ்வளவுதான் உலகப் பலன் கிடைத்தாலும் அவை அல்லாஹ்விடம் எந்த ஒரு பலனையும் பெற்றுத் தரப்போவதில்லை என்பதில் இளைஞர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

‘(நபியே! இவர்களிடம்) நீர் கூறுவீராக: என்னுடைய இறைவன் தடை செய்திருப்பவை இவற்றையெல்லாம்தாம்: மானக்கேடானவற் றைச் செய்தல் அவை வெளிப்படையாக இருந் தாலும் சரி; மறைவாக இருந்தாலும் சரி! பாவம் புரிதல், நேர்மைக்கு மாறாக வரம்பு மீறிய செயல்களில் ஈடுபடுதல்’ (திருக்குர்ஆன் 7:33)

### 3. மறுமைக்குப் பலன் தராத செல்வம்

செல்வம் என்பது இறைவனின் அருளா கும். திருமறைக் குர்ஆனில் அல்லாஹ் செல்வத்தை தான் நாடியவர்களுக்குத் தாராளமாக வழங்குவதாகவும்; தான் நாடிய வர்களுக்கு அளவோடு வழங்குவதாக வும் கூறுகின்றான். இன்றைய சூழலில் இளைஞர்கள் தங்களுக்காக, தங்கள் பெற் றோர்களுக்காக, மனைவி மக்களுக்காக அமைதியான வாழ்க்கை முறையைத் தருவதற்காக, உலகெங்கிலும் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். செல்வத் தைச் சம்பாதிக்கும் முறையிலும், அதைச் செல வழிக்கும் முறையிலும் இஸ்லாம் காட்டித் தரும் வழியில் உள்ளதா என்று ஒவ்வொரு இளைஞனும் சுயமதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். செல்வம் சேகரிப்பதிலேயே இளைமையைக் கழித்துவிட்டு அந்த மகத்தான அருளை மறுமைக்குப் பலன் தராத ஒன்றாக ஆக்கி விடக்கூடாது.

மறுமையில் இறைவனை நிராகரித்த மனிதன் இவ்வாறு புலம்புவான் என திருக் குர்ஆன் கூறுகிறது: ‘இன்று என்னுடைய செல்வம் எனக்கு எவ்விதப் பயனும் அளிக்க வில்லையே!’ (திருக்குர்ஆன் 69:28)

### 4. அல்லாஹ்வுக்குச் சிரம்பணியாத நிலை

இளமைப்பருவத்தில் அல்லாஹ்வுக்குச் சிரம்பணியாத உடல் ஆரோக்கியம் கை சேதத்திற்குரியதாகும். ஆரோக்கியம் என்பது இறைவன் அளித்த அருட்கொடை என்று நபி(ஸல்) அவர்கள் நமக்குக் கற்றுத் தந்திருக் கின்றார்கள். மனித வாழ்வில் ஆரோக்கியம் உயர்ந்த நிலையில் இருப்பது இளமைப் பருவத்தில் மட்டும்தான். இறைவனால் வழங்கப்பட்ட மகத்தான அருட்கொடை யாகிய இளமைப் பருவத்தை மறுமை வெற்றிக்காகப் பயன்படுத்துவதற்கு நாம் தவறிவிடக்கூடாது. இப்பருவம் வணக்க சாலிகளுக்கான பருவம். இன்று நின்று தொழக்கூடியவர்கள்; முதுமையில் நிற்க முடியாமலோ; இன்று முழுமையாக நோன்பு நோற்கக் கூடியவர்கள் முதுமையில் நோன்பு நோற்க முடியாமலோ ஆகிவிடக் கூடும்.

நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறி னார்கள், ‘நிழல் கிடைக்காத அந்த மறுமை நாளில் அல்லாஹ் ஏழு நபர்களுக்கு தன்னு டைய அர்ஷின் நிழலிலிருந்து இடம் தருகின் றான். அவர்களில் ஒருவர் அல்லாஹ்வை வணங்கக்கூடிய நிலையிலேயே தன்னுடைய இளமையக் கழித்த இளைஞர் ஆவார்’

### 5. இறையன்பால் அலங்கரிக்கப்படாத உள்ளம்

பெரும்பான்மையான இளைஞர்கள் சினிமா நடிகர், நடிகைகளையும், விளை யாட்டு வீரர்களையும் அளவு கடந்து நேசிப்பதும் அதன் விளைவாக வரம்பு மீறிய காரியங்களில் ஈடுபடுவதையும் பார்க்க முடிகிறது. அல்லாஹ்வின் அன்பு குடி கொள்ளும் உள்ளத்தில் அற்பப் படைப்பு களுக்கு இடம் தரலாமா! இளமைப் பருவத்தை வீணாக்கலாமா?

அல்லாஹ்வின் மீது நாம் கொள்கின்ற அன்புதான் இறைவிசுவாசிகளை இயக்கும் கருவியாக இருக்க வேண்டும். வாழ்வின் ஒவ்வொரு நகர்வுகளும் அல்லாஹ்வின் அன்பினால் இருக்க வேண்டும். நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். ‘எவர் ஒருவர் அல்லாஹ்வுக்காக நேசித்தாரோ; அல்லாஹ்வுக்காக வெறுத்தாரோ; அல் லாஹ்வுக்காகக் கொடுத்தாரோ; அல்லாஹ் வுக்காகக் கொடுக்காமல் தடுத்தாரோ; அவர் தன்னுடைய ஈமானில் முழுமை பெற்று விட்டார்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் இறைவிசு வாசிகளைப் பற்றிக் கூறுகின்றான்: ‘மேலும், அல்லாஹ்வின் மீதுள்ள அன்பினால் வறிய வருக்கும், அநாதைக்கும், கைதிக்கும் உணவளிக்கின்றார்கள். (மேலும், அவர் களிடம் கூறுகின்றார்கள்) நாங்கள் அல்லாஹ் வுக்காகவே உங்களுக்கு உணவளிக் கின்றோம். நாங்கள் உங்களிடமிருந்து எந்தப் பிரதிபலனையும், நன்றியையும் எதிர்பார்க்க வில்லை. நீண்ட, கடும் துன்பத்திற்குரிய ஒரு நாளின் வேதனையைக் குறித்துதான் எங்கள் இறைவனிடம் நாங்கள் அஞ்சுகின்றோம். எனவே, அல்லாஹ் அவர்களை அந்நாளின் தீங்கிலிருந்து காப்பாற்றிக் கொள்வான்; அவர்களுக்குப் பொலிவையும் மகிழ்வையும் அளிப்பான்’. (திருக் குர்ஆன் 76:8-11)

### 6. நற்செயல்கள் புரியாமல், பாவமன்னிப்புப் பெறாமல் செலவிடப்படும் நேரம்

நாள்கள் நகருகின்றன; நிமிடங்கள் செல் கின்றன; வினாடிகள் கழிகின்றன. இளமைப் பருவமும் கடந்து கொண்டிருக்கிறது. இன் றைய இளைஞர்களில் பலர் பொழுதுபோக்கு களில் அதிகமான நேரங்களைச் செலவழிக் கின்றனர். இளமை என்பது அனுபவிப் பதற்காக எனும் தவறான கண்ணோட்டம் பரவலாக விதைக்கப்படுகின்றது.

இமாம் ஹஸன் பஸரி(ரஹ்) கூறுகிறார்கள்: ‘விடியல் உதயமாகும் வேளையில் அன்றைய நாள் கூறுகிறது: ‘மனிதனே!

நான் புதியதோர் படைப்பு. இன்றைய உனது வேலைக்கு நான் சாட்சி. என்னை அரிய பொருளாக நினைத்து பயன்படுத்து. ஏனெனில் நான் போய்விட்டால் மறுமை நாள் வரை உன்னிடம் வர மாட்டேன்'. இளமை எனும் வலிமையினால் தான் செயற்கரிய நற்செயல்களைச் செய்ய முடியும். வரலாறு நெடுகிலும் இதற்கான அடையாளங்களை நம்மால் பார்க்க முடியும்.

அல்லாஹ் திருமறைக் குர்ஆனில் கூறுகின்றான்: 'காலத்தின் மீது சத்தியமாக! மனிதன் உண்மையில் நஷ்டத்தில் இருக்கிறான். ஆனால், எவர்கள் இறைநம்பிக்கை கொண்டும், நற்செயல்கள் புரிந்துகொண்டும் மேலும், ஒருவருக்கொருவர் சத்தியத்தை எடுத்துரைத்தும் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு அறிவுரை கூறிக் கொண்டும் இருந்தார்களோ அவர்களைத் தவிர!' (திருக்குர்ஆன் 103:1-3) மேற்சொன்ன நான்கு பண்புகளையும் தம்முள் கொண்டிராதவர்கள் இழப்பில் ஆழ்ந்துள்ளனர் என்று இவ்வசனம் கூறுகிறது.

இஸ்லாமிய வாழ்க்கை நெறியைக் கற்று, செயல்வடிவில் சான்று வழங்க வேண்டும். ஒவ்வொரு துறைகளிலும் இருக்கும் அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி அல்லாஹ்வின் திருப்தியைப் பெற இளமைப் பருவத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

### 7. இறை நெருக்கத்தைப் பெற்றுத் தராத நட்பு

நட்பினால் கிடைக்கும் அனுபவங்கள் இளமைப் பருவத்தில் அனைவருக்கும் அலாதியானது. நட்பின் பலன்களைப் பற்றி மணிக்கணக்கில் பேசலாம். அதேசமயம் கூடா நட்பு கேடாய் முடியும் என்று பிரபலமான கூற்றும் உண்டு.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நல்ல நண்பனுக்கும் தீய நண்பனுக்கும் உள்ள வித்தியாசம் என்பது கஸ்தூரி வியாபாரியையும், உலை ஊதும் கொல்லனையும் போன்றதாகும். முதல் மனிதனிடமிருந்து நீங்கள் கஸ்தூரியை வாங்கலாம் அல்லது அதன் மணம் உங்களோடு ஒட்டியிருக்கும். ஆனால் இரண்டாமவன் உங்கள் ஆடையை எரித்து விடலாம் அல்லது துர்நாற்றத்தை அடைவீர்கள்.

இன்றையச் சூழலில் இளைஞர்கள் தற்காலிக மகிழ்விற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் நட்பு கொள்கின்றனர். இறைவனுக்காக ஒன்று சேரும் நண்பர்களை அரிதாகவே பார்க்க முடிகிறது.

திருமறைக் குர்ஆனில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: 'எவர்கள் தம்முடைய இறைவனின் திருப்தியை நாடி காலையிலும் மாலையிலும் அவனை அழைக்கிறார்களோ, அவர்களுடன் சேர்ந்து இருப்பதில் உமது மனதைத் திருப்தி கொள்ளச் செய்வீராக! ஒருபோதும் உமது பார்வையை அவர்களை விட்டுத் திருப்ப வேண்டாம். உலக வாழ்க்கையின் அலங்காரத்தை நீர் விரும்புகிறீரா என்ன? நம்மை நினைவு கூர்வதை விட்டும் எவனது இதயத்தை நாம் அலட்சியம் கொள்ளச் செய்துள்ளோமோ எவன் தன் இச்சைப்படி வாழும் நடத்தையை மேற்கொண்டிருக்கிறானோ எவன் தன் செயல் முறைகளில் வரம்பு மீறிச் சென்று கொண்டு இருக்கிறானோ அவனுக்கு நீர் கீழ்ப்படியாதீர்' (திருக்குர்ஆன் 18:28)

இக்கால இளைஞர்களுக்கு இளமைப் பருவத்திற்கு இஸ்லாம் அளிக்கும் கண்ணியத்தையும், மகத்துவத்தையும் புரிய வைக்க வேண்டும். இளைஞர்களின் ஆற்றல் வீணாவதிலிருந்து இஸ்லாமிய சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும். இளைஞர்கள் தான் இஸ்லாமிய வாழ்க்கை நெறியை ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குக் கடத்திச் செல்லும் பாலங்களைப் போன்றவர்கள். பாலங்கள் பலவீனமானால் வீழ்வது எதிர்காலத் தலைமுறையும் தான்.

இளைஞர்களே! மார்க்கத்தைக் கற்று, வாழ்வில் சான்று பகர வாருங்கள். ஒரு தலைமுறையே உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள்.



# பெரு நிலத்தின் கதையாடல்

- ஏ.நஸ்புள்ளாஹ்

நிலம் எனும் ஆதிப்புத்தகம்
திசைகள் அற்றுத் தகித்திருந்த
ஆதிப் பெரு வெளியில்
உயிர்களின் முதல் முளைப்பை
உரிமையோடு ஏந்திய தேசம்

காலத்தின் சுவடுகள்
பாறைகள் பிளந்து
மணலாகிப் போன கதையையும்
ஆறுகள் தடம் மாறிப் பாய்ந்த
வடுக்களையும்
உன் மார்பில் விழுந்த ரத்தத்தின்
பெரும் கதையாடலையும் நீ அறிவாய்

வரலாற்றின் சாட்சி
எத்தனை போர்கள் உன் மடியில்?
எத்தனை வேர்வைகள் உனக்கு வரலாறு?

மன்னர்கள் மாய்ந்ததும்
மண்ணின் மைந்தர்கள்
விதையாகிப் போனதும்
உன் மௌன ஏடுகளில்
மறையாத எழுத்துகளாய்

போராட்டத்தின் மொழி
ஏர் முனை தொட்ட இடமெல்லாம்
சாட்சியங்களாய்ப் போன உன் பாடலில்
நாகரிகங்கள் தோன்றி மறைந்தாலும்
மாறாத உனது மௌன வலிகள்
நீயே தொடக்கம்
நீயே முடிவு

வானம் பார்த்த
உன் பிரார்த்தனைகள் இன்னும்
உனது ஆழத்தில்
எதிர்பார்ப்புகளுடன் புதைந்திருக்கின்றன
மனித இனம் இன்னும் வாசிக்காத
ஆயிரமாயிரம் வாழ்வியல் கதைகளென

காஸா என்பது
ஒரு தொடர்ச்சியான
உரையாடல்தான்



Digital Hub
unit of The Chennai Mobiles
வீட்டிற்கு தேவையான அனைத்து
அப்ளையன்சஸ்கள் ஒரே இடத்தில்..!
MOBILES
LAPTOPS
GADGETS
SMART TV
WASHING MACHINE
REFRIGERATOR
AIR CONDITIONER
KITCHEN APPLIANCES
15* UPTO % CASH BACK
EXCHANGE BONUS UPTO ₹5000*
0* % NO COST EMI
NO COST EMI
EXCHANGE OFFER
FREE SURPRISE GIFTS
LATEST MODELS
T&C Apply*
The Chennai Mobiles®
99444 12345, 89405 12345
www.thechennaimobiles.com

# நபிகள் நாயகம்(ஸல்) போதிக்கும்
# விலங்கு வளர்ப்பு



- ச.அக்ஷயா

12ஆம் வகுப்பு, இமாம் ஷாஃபி(ரஹ்) மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அதிராம்பட்டினம், தஞ்சை மாவட்டம்

சென்னை பெரம்பூர் ஜமாலியா மேனிலைப்பள்ளி ஆண்டுதோறும் நடத்தும் அனைத்துப் பள்ளி நபிகள் நாயகம் கட்டுரைப் போட்டியில் 2025–2026 (52ஆவது) ஆண்டிற்கான போட்டியில் முஸ்லிம் அல்லாத மாணவர்களுக்கான பிரிவில் முதல் பரிசு பெற்ற கட்டுரை

## முன்னுரை

பூமியில் உள்ள எந்த உயிரினமும், தங்கள் இறக்கைகளால் பறக்கும் எந்தப் பறவையும் உங்களைப் போலவே ஒரு சமூகமாக இருக்கின்றன என்று திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான். அவை மனிதர்களைப் போலவே தங்கள் சொந்த இருப்பைக் கொண்ட சமுதாயமாக இஸ்லாம் பார்க்கிறது.

## கருணை, மரியாதை காட்டுதல்

விலங்குகளிடம் கருணையுடன் நடந்து கொள்வதும் நற்செயல் என்கிறது இஸ்லாம். மனிதர்களிடம் கருணை காட்டுவது போன்ற ஒரு நற்செயல் என்றும் அதற்கு அல்லாஹ் விடத்தில் கூலி உண்டு என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ‘ஒரு விலங்கிற்குச் செய்யும் கொடுமை மனிதர்களுக்குச் செய்யும் கொடுமைக்குச் சமமான பாவம் ஆகும்’

## ஒட்டகத்தின் கண்ணீர்

ஒரு முறை நபியவர்கள் ஓர் ஒட்டகத்தின் அருகே சென்ற போது அதன் கண்களில் கண்ணீர் வழிவதைப் பார்த்தார்கள். அதன் உரிமையாளரிடம் சென்று, ‘அல்லாஹ் உனக்கு இதன் மீது அதிகாரம் கொடுத்தும் நீ அதற்குப் போதுமான உணவு கொடுக்காமலும், தாங்க முடியாத சுமை ஏற்றியும் ஏன் அதைத் துன்புறுத்துகிறாய்?’ என்று கேட்டு ஒட்டகத்தின் கழுத்தைத் தடவி அதைச் சமாதானப்படுத்தினார்கள்.

## பறவையின் மனவேதனை

பறவைக் குஞ்சு ஒன்றை நபித்தோழர் எடுத்து வந்தார். அப்போது தாய்ப் பறவை துக்கத்துடன் சிறகடித்துச் சுற்றியது. அதைப் பார்த்த நபி(ஸல்) அவர்கள் ‘இந்தப் பறவையின் குஞ்சுகளை எடுத்து அதன் மனதைப் புண்படுத்தியது யார்? உடனடியாக அவற்றைத் தாயிடம் ஒப்படைத்து விடுங்கள்’ என்று கூறினார்கள்.

## முத்திரை குத்தாதீர்

ஒரு கழுதையின் முகத்தில் சூடான இரும்பினால் முத்திரை குத்தப்பட்டிருந்ததைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் அவ்வாறு செய்தவரை அல்லாஹ் சபிப்பனாக என்று கூறினார்கள். இது அங்கவீனப்படுத்துவதற்கு எதிரான கடுமையான போதனை ஆகும்.

## தேவையின்றி அமராதீர்

பயணத்திற்காக அல்லது வேலைக்காகப் பயன்படுத்தப்படும் விலங்குகள் (ஒட்டகம், குதிரை) மீது வேலை இல்லாத போது சும்மா அமர்ந்திருப்பவர்களை நபி(ஸல்) அவர்கள் கண்டித்துவிட்டு, ‘விலங்குகளின் முதுகை நாற்காலியாக மாற்றாதீர்கள்’ என்று எச்சரித்தார்கள்.

## வேதனை தராதீர்

விலங்குகளை அறுக்கும் போது கத்தியைக் கூர்மைப்படுத்துவது மட்டுமல்லாமல் ஒரு விலங்கின் கண்முன் கத்தியைக் கூர்மைப் படுத்தி அதை இரண்டு முறை இறக்கச் செய்ய

நீங்கள் விரும்புகிறீர்களா? என்று கேட்டு விலங்குகளை அறுக்கும் முறையை இரக் கத்துடன் செய்யுமாறு அறிவுறுத்தினார்கள்.

விலங்குகளை அறுக்கும் போது கத்தியை நன்கு கூர்மைப்படுத்த வேண்டும் என்றும் மற்ற விலங்குகள் பார்க்கும் வகையில் அறுக் கக் கூடாது என்றும் இதனால் கொல்லப்படும் விலங்கு குறைந்த வலியால் சாகும் என்று போதித்தார்கள்.

### துன்புறுத்தாதீர்

விலங்குகளைத் துன்புறுத்துபவர்களை நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள். ஒரு பூனையைக் கட்டிவைத்து உணவு கொடுக் காமல் கொன்ற ஒரு பெண்ணுக்கு அல்லாஹ் தண்டனை அளிப்பான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

### பரிவு காட்டுங்கள்

விலங்குகளுக்குத் தேவையான உணவை யும், தண்ணீரையும் உரிய நேரத்தில் கொடுக்க வேண்டும். தாகத்தில் இருந்த ஒரு நாய்க்கு தண்ணீர் கொடுத்த ஒரு மனிதருக்கு அல்லாஹ் மன்னிப்பு வழங்கியதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

### அளவுக்கு அதிகமாக சுமை ஏற்றாதீர்

விலங்குகள் மீது அவற்றின் சுமக்கும் திற னுக்கு அதிகமாக சுமையை ஏற்றக் கூடாது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

### சூடு போடாதீர்கள், உடலைச் சிதைக்காதீர்

விலங்குகளின் முகத்தில் அடிப்பது குறிப் பாக சூடு போடுவது அல்லது காயம் ஏற்படுத்துவதை இஸ்லாம் தடை செய்கிறது. உணவுக்காக விலங்கின் வாலை அல்லது திமிலை அது உயிருடன் இருக்கும் போது வெட் டுவது போன்ற கொடூரமான நடைமுறைகளை நபி(ஸல்) அவர்கள் கண்டித்துள்ளார்கள்.

### வேடிக்கைக்காகக் கொல்லத் தடை

உணவுத் தேவைக்காக இல்லாமல் வேடிக் கைக்காகவோ அல்லது விளையாட்டுக்காகவோ விலங்குகளை வேட்டையாடுவதோ அல்லது கொல்வதோ அனுமதிக்கப்படவில்லை. சிறு குருவிகளைக் கூட காரணமின்றிக் கொன்றால் அல்லாஹ் கேள்வி கேட்பான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.

### மென்மையாக நடந்து கொள்ளுங்கள்

ஆயிஷா(ரலி) அவர்கள் ஒருமுறை ஒரு குதிரையின் மீது சவாரி செய்தார்கள். அக்குதிரை அவர்களுக்குச் சிரமத்தை அளித் தது. அதனால் அவர்கள் அதனுடைய கடிவாளத்தைத் திரும்பப் திரும்பப் பிடித்து இழுத்துக் கொண்டே இருந்தார்கள். அதனைப் பார்த்த நபி(ஸல்) அவர்கள் நீ அதனிடம் மென்மையாக நடந்து கொள் என்றார்கள். (முஸ்லிம் 2598)

### உணவளியுங்கள்

ஒரு முறை நபியவர்கள் ஓர் ஒட்டகத்தைக் கடந்து சென்றார்கள். அது பசியால் வயிறு ஒட்டிப் போய் மெலிந்திருந்தது. அப்போது நபியவர்கள், ‘ உங்கள் கால்நடைகள் குறித்து அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். அதற்குத் தீனி கொடுங்கள். அது நல்ல நிலையில் இருக்கும் போது சவாரி செய் யுங்கள்’ என்றார்கள். (அபூதாவூத் 2548)

‘பேச முடியாத இந்த மிருகங்கள் விஷயத் தில் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்’ என்று நோய் வாய்ப்பட்ட அல்லது மெலிந்த ஒட்டகத்தைப் பார்த்து நபி(ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

### நற்கூலி நிச்சயம்

‘உயிருள்ள ஒவ்வொரு பிராணியின் விஷயத்திலும் நற்கூலி உண்டா?’ என்று நபித்தோழர்கள் கேட்ட போது நபி(ஸல்) அவர்கள் ‘விலங்குகளுக்குச் செய்யும் எந்த வொரு கருணைச் செயலும் மறுமையில் கூலி யைப் பெற்றுத் தரும்’ என்று பதிலளித்தார்கள்.

இஸ்லாம் விலங்கு வளர்ப்பில் கரு ணையையும் உரிமைகளையும் எவ்வளவு ஆழமாக மதிக்கிறது என்பதை நபி(ஸல்) அவர்களின் வாழ்வும் போதனைகளும் நமக் குத் தெளிவாக எடுத்தியம்புகின்றன.

# நேர்ச்சை

- ஆர்னிகா நாசர்

அமரர் கங்காதரன் புற்றுநோய்ச் சிகிச்சை மைய வளாகத்திற்குள் காரை நிறுத்தி விட்டு இறங்கினார் தைமிய்யா. பின்னிருக்கையில் இருந்த தைமிய்யாவின் மனைவி உஸ்வத்துல் ஹஸனா பலவீனமாய் சிரமப்பட்டு இறங்க முடியாமல் இறங்கினாள்.

தைமிய்யாவுக்கு வயது 65. ஹஸனா அவரை விட ஐந்து வயது இளையவள். இருபதுக்கும் மேற்பட்ட தொழில்கள் செய்யும் கோடீஸ்வரனான தைமிய்யா மெக்கானிக் ஷாப்பில் எடுபிடியாக வாழ்க்கையைத் தொடங்கியவர். உஸ்வத்துல் ஹஸனாவைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்குப் பிறகுதான் முழுமையான பொருளாதார வெற்றி அடைந்தார் தைமிய்யா.

தைமிய்யாவுக்கும் உஸ்வத்துல் ஹஸனாவுக்கும் திருமணமாகி 42 ஆண்டுகள் ஆகின்றன. திருமணத்தின் போது கட்டெறும்பாய் ஆரம்பித்த காதல் இப்போது நீலத்திமிங்கலமாய் விஸ்பரூபித்து நிற்கிறது. எப்போது பார்த்தாலும் மனைவியைப் புதிதாய் பார்ப்பது போல ரசித்துப் பார்ப்பார் தைமிய்யா. மனைவியின் குரலை, நடை உடை பாவனைகளை, தூக்கத்தை, உணவு உண்பதை, அபூர்வமாய் கோபப்படுவதை, சிரிப்பதை, சமைப்பதை, நடப்பதை, தலை வாருவதைப் பேருவகை கொண்டு பார்ப்பார்.

தைமிய்யா - உஸ்வத்துல் ஹஸனா தம்பதியினருக்கு இரு மகள்கள் இரு மகன்கள். மகள்கள் பெயர் கதீஜா, ஆயிஷா. மகன்கள் பெயர் ஹசன், ஹுஸைன். நால்வரும் அவரவர் இணை, குழந்தைகளுடன் தனித்தனியாக வசிக்கின்றனர். எல்லாம் நன்றாகச் சென்று கொண்டிருந்தபோது நான்கு ஆண்டுகளுக்கு முன் அந்த விபரீதம் நடந்தது. மனைவி உஸ்வத்துல் ஹஸனா மயங்கி விழுந்தாள். மருத்துவமனையில் சேர்த்து எல்லா பரிசோதனைகளும் எடுத்தார்கள். ஹஸனாவுக்கு இரத்தப் புற்றுநோய் என்பது உறுதியானது.

தொடர்ந்து ஹஸனாவை அமரர் கங்காதரன் புற்றுநோய் சிகிச்சை மையத்தில் காட்டினர். கீமோதெரபி தொடர்ந்தது. நான்காண்டு சிகிச்சைக்குப் பிறகு கடந்த வாரம் ஹஸனாவுக்கு எல்லா பரிசோதனைகளும் செய்யப்பட்டன. பரிசோதனை முடிவுகளை இன்று அறிவிக்கப் போகிறார் தலைமை மருத்துவர் பூங்கொடி பாலமுருகன். தன்னுடைய அறையை விட்டு வெளியே வந்து கணவன் மனைவி இருவரையும் வரவேற்றார் தலைமை மருத்துவர்.

இருவரையும் தனித்தனி இருக்கையில் அமர வைத்து டைரக்டர் ரிவால்விங் மாடல் சேரில் அமர்ந்தார் பூங்கொடி.

'டெஸ்ட் ரிப்போர்ட்கள் என்ன சொல்கின்றன?' பதைபதைப்புடன் வினவினார் தைமிய்யா.

'இரத்தப் புற்றுநோய் என்பது எலும்பு மஜ்ஜையில் இயல்பான இரத்த அணுக்களின் உற்பத்தியைச் சீர்குலைத்து ஒழுங்காகச் செயல்பட முடியாத அசாதாரண செல்களின் கட்டுப்பாடற்ற வளர்ச்சியே ஆகும். இது இரத்தம், எலும்பு மஜ்ஜை அல்லது நிணநீர் மண்டலத்தைப் பாதிக்கிறது. இரத்தப்புற்றுநோய் லுகேமியா, லிம்போமா, மைலோமா என மூன்று வகைப்படும். உங்கள் மனைவிக்கு வந்தது லுகேமியா'

‘எல்லாம் சரி, என் ஹஸனாவுக்குக் குணமாகிவிடும் தானே டாக்டர்..!’

‘ஒரு மருத்துவ அற்புதம் நடந்திருக் கிறது. உங்கள் மனைவி முழுமையாகக் குணமாகி விட்டார். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். அல்லாஹ்வின் கருணை, உங்கள் கணவரின் பேரன்பு, மருத்துவத்திற்கு உங்கள் ஒத்துழைப்பு, எங்கள் மருத்துவம் நான்கும் கைகோர்த்து லுகேமியாவுடன் போரிட்டு ஜெயித்து விட்டீர்கள்’

‘இனி மருந்துகள் சாப்பிடவேண்டுமா?’

‘ஆறு மாதங்கள் சாப்பிட்டால் போதும் அதன்பின் நிறுத்திவிடலாம்’

‘டாக்டரம்மா உங்களிடம் ஒரு ரகசியம் சொல்லட்டுமா?’

‘சொல்லுங்க பாய்...’

‘உஸ்வத்துல் ஹசனா குணமானது எனது நேர்ச்சைக்காக அல்லாஹ் தந்த பரிசு’

‘நேர்ச்சை என்றால்?’

‘தன் குழந்தைக்குக் குணமானா திருப் பதிக்கு வந்து மொட்டை போட்டுக் கிறேன்னு இந்து சகோதரர் வேண்டிக் கொள்வார் இல்லையா? தொழிலில் அபி விருத்தி ஏற்பட்டால் வேளாங்கண்ணி தேவாலயத்திற்கு வெள்ளிச் சிலுவை சாத்துறேன்னு கிறித்தவ சகோதரர் வேண் டிக் கொள்வார் இல்லையா? அது மாதிரி நானும் அல்லாஹ்விடம் நான்கு ஆண்டு களுக்கு முன் கண்ணீருடன் நேர்ச்சை செய்து கொண்டேன்’

‘என்ன நேர்ச்சை?’

‘என் காதல் மனைவி உஸ்வத்துல் ஹசனாவுக்குப் பூரணமாய் குண மானால் என் முழு சம்பாத்தியத்தை யும் விற்று மக்கா நகரின் புனித கஅபா வாசலில் வைத்து விடுகிறேன் என திருக்குர்ஆனின் மீது கை வைத்து நேர்ச்சை செய்தேன்!’

‘என்ன காரியம் செய்தீர்கள்? உணர்ச்சி வசப்பட்டு இப்படி நேர்ச்சை செய்யலாமா? ஹைலி அன்ரியலிஸ்டிக். நேர்ச்சையை மாற்றி ஆயிரக்கணக்கான ஏழைகளுக்குப் பொருளுதவி செய்து திருப்தியடையுங்கள்’

‘நோ... நான் நேர்ச்சை செய்ததிலிருந்து ஒரு துளிகூட பின்வாங்க மாட்டேன்’

‘சிகிச்சைக்கு நன்றி டாக்டர்..! இந் தாருங்கள் உங்கள் மருத்துவமனைக்கான பத்துலட்சம் ரூபாய் நன்கொடை’ காசோலையை நீட்டினார் தைமிய்யா.

ஜமாஅத் கூடியிருந்தது. இமாம், முத்தவல்லி, நிர்வாகிகள் அமர்ந்திருந்தனர். அவர்களின் எதிரில் தைமிய்யா, உஸ் வத்துல் ஹஸனா, மகன் மகள்கள் அமர்ந் திருந்தனர். அழகிய முகமன்கள் பரி மாற்றம்.

இமாம் பேச ஆரம்பித்தார்.

‘உங்கள் மனைவி இரத்தப்புற்று நோயிலிருந்து குணமானா உங்க சொத்து களை எல்லாம் வித்து கஅபா வாசலில் வைத்துவிடுவதாக நேர்ச்சை செய்துள் ளீர்கள். இந்த நேர்ச்சைக்கு எதிராக உங்கள் மனைவியும் மகன் மகள்களும் மனு கொடுத்துள்ளார்கள். அதனை விசாரிக்கவே இங்கு கூடியுள்ளோம்’



'எனது நேர்ச்சை எனக்கும் அல்லாஹ் வுக்கும் இடையே அந்தரங்கமானது. அதில் நீங்கள் ஏன் மூக்கை நுழைக்கிறீர்கள்?'

'நேர்ச்சை இருவகைப்படும். எவரே னும் அல்லாஹ்வின் வழியில் நேர்ச்சை செய்தால் அது அல்லாஹ்வுக்குரியதாகும். அதனை அவர் நிறைவேற்ற வேண்டும். எவரேனும் அல்லாஹ்வுக்கு மாறு செய் வதில் நேர்ச்சை செய்தால் அது ஷைத் தானுக்கு உரியதாகும். அதனை அவர் நிறைவேற்ற வேண்டியதில்லை. இரண் டாவது வகை நேர்ச்சைக்குப் பரிகாரம் உண்டு'

'எனது நேர்ச்சை அல்லாஹ்வின் வழி சார்ந்ததே!'

'உங்கள் சொத்துகள் அனைத்தும் சுய சம்பாத்தியம் தானே?'

'ஆமாம்!'

'உங்கள் சொத்துகளின் இன்றைய மதிப்பு?'

'முப்பதுகோடி!'

'நான்கு வகை நேர்ச்சைகளை மார்க்கம் தடை செய்கிறது. உறவைத் துண்டித் துக் கொள்ள நேர்ச்சை கூடாது. தன் னையோ, பிறரையோ பலியிடுவதாக நேர்ச்சை கூடாது. மனிதனின் கைவசத்தில் இல்லாததிலும் நேர்ச்சை கூடாது. உங்களது நேர்ச்சை கணவன் மனைவியின் மீதி வாழ் நாளை, பிள்ளைகளின் எதிர்காலத்தை முழு வதும் முறித்துப் போடும் தன்மை கொண் டது. உங்கள் மனைவி உங்கள் நேர்ச்சை பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்!'

'நான் உயிர் பிழைத்தது எனது மகன் களும் மகள்களும் தெருவில் நிற்பதைப் பார்க்கவா? என்னிடம் ஒரு வார்த்தை கேட் டுவிட்டு நேர்ச்சை பண்ணி இருக்கலாமே. என்னை நீங்கள் இன்னும் நேசிப்பது உண்மை என்றால் நேர்ச்சையை ரத்து செய்து பரிகாரம் தேடுங்கள்!' என்றாள் உஸ்வத்துல் ஹஸனா.

'உங்களைப் போன்ற பெற்றோர் பிள்ளைகளுக்குக் கிடைப்பது அபூர்வம். நாங்கள் கொடுத்து வைத்தவர்கள். எங்களுக்கு உங்கள் சொத்தில் பங்கு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் நீங்களும் புற்றுநோயிலிருந்து குணமான அம்மாவும் மீதி வாழ்நாளை தெருவில் யாசகம் கேட்டுப் பிழைப் பீர்களா? நடைமுறைச் சாத்தியம் அறவே இல்லாத உங்கள் நேர்ச்சையை முழுமை யாக எதிர்க்கிறோம்!' என்றனர் மகன்களும் மகள்களும் கோரஸாய்.

'நேர்ச்சையிலிருந்து பின் வாங்குவது அல்லாஹ்வுக்கு மாறு செய்வதாகும்!'

இமாம் குறுக்கிட்டார். 'உங்கள் நேர்ச் சைக்குப் பரிகாரத்தை இஸ்லாம் அனுமதிக் கிறது. உங்கள் சொத்தில் மூன்றில் ஒரு பங்கை அறம் செய்தால் போதுமானது. உங்கள் சொத்தில் ஏழு கோடி ரூபாய் பிரித்து உங்கள் மனைவியின் பெயரால் ஓர் அறக்கட்டளை ஆரம்பியுங்கள். மனைவியின் பெயரால் மருத்துவமனை, கல்விக்கூடம் கட்டுங்கள். இஸ்லாமிய நூலகம் அமையுங்கள். அறக்கட்டளை அமைத்து நீங்கள் செய்யும் பணிகளை பள்ளிவாசல் பைத்துல்மாலிடம் பணத்தை ஒப்படைத்தும் செய்யலாம்.

நீங்கள் சொத்தை விற்று முழுப் பணத்தை விமானத்தில் எடுத்துப் போக கஸ்டம்ஸ் அனுமதிக்காது. சொத்தை விற்ற பணத்தை கஅபா வாசலில் வைக்க சௌதி அரசாங்கம் அனுமதிக்காது. மீறி அனுமதித்தாலும் கஅபா வாசலில் நீங்கள் வைக்கும் பணம் என்னவாகும் என்று யாராலும் அனுமானிக்க முடியாது. இஸ்லாம் கடவுளுக்குக் காணிக்கை கேட்கும் மார்க்கம் அல்ல. ஏழைகளுக்கே பகிர்ந்தளிக்கச் சொல்கிறது.

'மாஷா அல்லாஹ். இமாம் நீங்கள் சொன்னபடியே பரிகாரம் செய்கிறேன்'

'எல்லாவற்றுக்கும் அல்லாஹ் போது மானவன்!' என்றார் தைமிய்யா.

அல்லாஹ்வின்
விருந்தாளிகளின்
சேவையில்
31வது
வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
**சென்னை 044-28594441 / 2 / 3**
**95516 622 31**
**91 98410 786 36**

# அரபுப் பெண்களின் உடை

- நஸ்ரத் ரோஸி

அரபு நிலத்திற்கான மக்கள் அரபிகள் என அறியப்படுகின்றனர். அரபிகளும் யூதர்களைப் போல செமிதிக் இனக் கூட்டத்தின் ஓர் அங்கம் தான். செமிதிக் கூட்டத்தாரில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு மதங்களை ஏற்றுக்கொண்டவர்கள் உண்டு. செமிதிக் என்றாலே அவர் யூதராகத்தான் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. அவர்களில் பல குலங்களும் கோத்திரங்களும் உண்டு. அரபிகளுடைய பழங்குடி மரபில் பல்வேறு விதமான தெய்வ நம்பிக்கைகள் கொண்டிருந்தவர்கள் ஒன்றுகூடி வாழ்ந்தார்கள். ஆனால் அன்றும் கூட செல்வந்தர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் பெரிய இடைவெளி இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

அரபிகளில் மிகப்பழமையான பழங்குடிகள் என்றால் அது பெடுவின் எனும் நாடோடிக் கூட்டத்தாரைத் தான் குறிப்பிட வேண்டும். அவர்களும் பின்னாளில் ஒரே இடத்தில் நிலைத்து வாழத் தொடங்கிவிட்டனர். இவர்கள் அரேபியப் பாலை வனத்தில் மட்டுமல்ல பண்டைய மெசபடோமியா, வடக்கு ஆப்பிரிக்கா, இன்றைய ஃபலஸ்தீன் மேற்குக்கரை, சிரியாவிலும் காணப்பட்டவர்களாவர்.

இஸ்லாத்திற்கு முந்தையகால அரேபியப் பெண்களின் உடைகளை வைத்தே தொடங்குகிறது ஒரு ஆராய்ச்சி. Research-gate.net தளத்தில் இதற்கான கட்டுரைகள், புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ள டேவிட் இ.லாங் என்பவர் சமர்பித்த தரவுகளும், Yedida Kalfon Stillman, Arab Dress: A short History; from dawn of Islam to Modern Times, ed. Norman A. Stillman (Leiden: Brill, 2003) போன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளுடைய சாராம்சம் இப்பதிவு.

அரேபியப் பெண்களை மூன்று தரமாகப் பிரிக்கலாம். ஒன்று உயர்வகுப்புப் பெண்கள், உதாரணமாக நபிகள் நாயகம் முஹம்மது(ஸல்) அவர்களின் குறைஷி குலத்தாரைப் போல செல்வத்திலும் சமூக அந்தஸ்திலும் உயர்ந்த குடும்பத்தாரின் பெண்கள். இரண்டாவது, பெடுவின் நாடோடிக் குழுக்களைப் போல வாழும் மத்தியத்தர பழங்குடியினப் பெண்கள். மூன்றாவதாக உயர் வகுப்பு, அரேபிய நிலத்தில் வாழ்ந்த உயர்குடி யூதர், உயர்குடி கிறித்தவர், உயர்குடி பாகனியர்கள், உயர்குடி ஜொராஸ்ட்ரியர் களுக்கு அடிமைச் சேவகம் செய்த அந்தந்த சமுதாயத்தின் அடி மட்டப் பெண்கள்.



நன்றாகக் கவனித்தால் இதில் அரேபியர்களில் நபிகளாரின் குடும்பத்தாரைப் போலவே யூத, கிறித்தவ, பாகனிய உயர் குடிப்பெண்கள் இஸ்லாத்திற்கு முந்தைய காலகட்டங்களிலும் மிதமிஞ்சிய ஆடைகள் அணிந்து கொண்டவர்களாகவும் தலை முதல் பாதம் வரை மறைத்துக்கொள்ளும் முழுமையான ஆடை களைத் தரித்தவர்களாகவும் தான் இருந்துள்ளனர். இவர்கள் எகிப்து, ரோமானிய, பாரசீக உயர்வகுப்புப் பெண்களைப் போல நல்ல உயர்ந்த ஆடைகள் அணிந்துகொள்ளும் வாய்ப்பும் உரிமை களும் பெற்றிருந்தனர். உடலை மூடிய முழு உடை கம்ஸா, கீழாடை சல்வார் அல்லது இடுப்பில் பாவாடை போல கட்டிக்கொள்ள

தைக்கப்படாத இஸார் (இதனை வேட்டி போல ஆண்களும் கட்டிக் கொள்வார்கள்), தலைக்கு அணிந்துகொள்ள ஹிஜாப் இது எல்லாமும் ஓர் உயர்குலத்து அரேபியப்பெண் அணியும் ஆடைகள்.

இரண்டாவதாக பெடுவின் ஆண்கள் மேல்சட்டை அணியாமல் உடலை துணியால் போர்த்தி இடுப்புக்கு ஒரு வேட்டி கட்டியிருப்பார்கள். பெடுவின் பெண்கள் சுட்டெரிக்கும் பாலைவனத்தில் அவர்கள் முழுமையான ஆடைகள் அணியவேண்டிய கட்டாயம் இருந்த காரணத்தால் அவர்களுடைய உடை கொஞ்சம் வித்தியாசமாக இருந்தது. நம் பெண்கள் பொதுவாகக் குளிக்கும் போது மார்புகளை மறைத்து பாவாடையால் மார்க்கட்டு கட்டிக்கொள்வதைப் போல ஒரு துணியை மார்பிலிருந்து முட்டிக்கால் வரையில் கட்டிக்கொள்வார்கள்.

தலைக்கு அணியும் முக்காடு அவர்களது கழுத்து, தோள்பட்டைகளை மூடாது முதுகுப் புறத்தில் விடப்பட்டிருக்கும். நம் நாட்டில் தேயிலைத்தோட்டப் பெண்கள் கட்டியிருக்கும் தலைக்கட்டு போல. பெடுவின் பெண்கள் வெயிலுக்கும் மணற்புயலுக்கும் பாதுகாப்பாக முகத்தை மூடும் நிகாப் கட்டாயமாக அணிந்திருப்பார்கள். பெடுவின் பெண்களைப் போல அரேபிய உயர்குடிப் பெண்களும் வீட்டைவிட்டு வெளியே வரும் போது முகத்தை மூடி நிகாப் அணிவார்கள்.

மூன்றாவதாக ஒரு தரப்பு அடிமைப் பெண்கள். இவர்களுக்குப் பெரும்பாலும் மார்பை மறைக்கும் உரிமையில்லை. தலையை, முகத்தை மூடும் உரிமையில்லை, இடுப்பில் மட்டும் முட்டிவரைக்கும் ஒரு முண்டு கட்டிக்கொள்ளும் அனுமதி மட்டுமே, மார்புகளை மறைக்க அவர்கள் தோலில் தைக்கப்பட்ட ஆபரணம் போன்ற ஒன்றை மாட்டிக்கொள்வார்கள். அதிலும் ரோமானிய, எகிப்திய கூட்டத்தார் வீடுகளிலுள்ள அடிமைப்பெண்கள் நிர்வாணமாகவும் இருக்க கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இதற்கான சாட்சிகளெல்லாம் எகிப்தின் பிரமிடுகளிலேயே மேலதிகமாகவே உள்ளது.

அரேபிய நிலத்தில் உயர்குடி ஆண்களும் பெண்களும் ரிதா எனும் மேலங்கி அணிவதைக் கவுரமாகக் கருதியுள்ளனர். சூப்பர்மேன் உடையில் பின்னால் ஒரு திரைத்துணி தொங்குவது போல அல்லது கிரேக்க அரசர்கள் தோளில் அணியும் நீண்ட துணியைப் போல இருக்கும் ரிதா பணக்காரத் தோரணையின் ஓர் அடையாளம். சாதாரண நேரங்களில் ஆண்கள் தலைக்கு அணியும் தலைப்பாகை குத்ரா எனவும், விசேஷ தினங்களுக்கு அணியும் அலங்காரத் தலைப்பாகை ஷம்லா எனவும் அழைக்கப்படும்.

பெண்களுடைய ஹிஜாபை ஒருவன் இழுத்தால் எத்தனை பெரிய அவமானமோ அதே அளவுக்கு ஒரு ஆணுடைய ரிதா - ஷம்லாவை யாரும் பிடித்து இழுத்தால் அது மரணதண்டனைக்குரிய குற்றமாகும். இதனைப் பற்றிய ஒரு குறிப்பினை இஸ்லாத்திற்கு முந்தைய அரபு இலக்கியம் ஒன்று பதிவு செய்துள்ளது. பனூ அமீர் குலத்தவனான அர்பாத் பின் காயிஸ் என்ற பாகனியன் ஹவ்தா கூட்டத்தாருடைய ஆண்களின் ஷம்லாவைப் பிடித்து இழுத்து அவமதித்ததால் கொல்லப்பட்டான் என்று லாபித் எனும் கவிஞர் பாட்டாகப் பதிவு செய்துள்ளார்.

இஸ்லாத்தை போதிக்கத் தொடங்கிய நபிகள் நாயகம் முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ் தனக்கு அனுப்பித்தந்த தூதுச் செய்திகளை முதன்முதலில் தங்கள் குடும்பத்தாரிடம் எடுத்துரைக்கத் தொடங்கும் போதே, 'தரையை உரசும் மணலைக்கூட்டும் அளவிற்கான உடையை பெருமையுடன் அணிந்து திரியாதீர்கள்' என்றார்கள். உயர்குடி வகுப்பான அவர்களுக்கு அது மரியாதைக் குறைவாகப் பட்டது.

பெடுவின் பெண்களும் அடிமைப் பெண்களும் உயர்குடி வகுப்புப் பெண்களைப் போலவே முழுமையாக ஆடை அணிய வேண்டும் என்றார்கள். ஆடைகள் அணிய அனுமதி பறிக்கப்பட்டிருந்த அடிமைப்பெண்களுக்கு அது ஆனந்தமாகவும், அடிமைகளுக்கு ஏன் இந்த உரிமையைத் தரவேண்டு

மென கொந்தளித்த மேட்டுக்குடிகளுக்கு ஆத்திரமாகவும் இருந்தது.

மதுக்கூடங்களில், விபச்சார விடுதிகளில், சூதாட்ட விடுதிகளில் பெண்களை அடிமைப் படுத்தியும் அவர்களது பாலினத்தைச் சுரண்டியும், பெண் பிள்ளைகள் பெற்றாலே புதைக்கப்பட வேண்டுமென்பதைத் தடுத்து நிறுத்தியும் புரட்சி செய்த இஸ்லாமிய அறிவுரைகள் ஒருபுறம் பெண்களுக்கான விடுதலையாகவும் மறுபுறம் இதனை விட்டுக்கொடுக்க முன்வராத அரேபிய பழங்குடிகளுக்குக் கடும் எரிச்சலையும் ஊட்டியது.

நபிகளார் தம் குலப்பெண்கள் போலவே நாடோடிப் பெண்களும் அடிமைப் பெண்களும் கண்ணியமான உடையணிய வேண்டுமென மார்க்கத்தில் உடை ஒழுக்கங்களைத் தீவிரப்படுத்தினார்கள். இந்தியாவிலும் ஒரு காலத்தில் பெண்கள் மார்புகளை மறைத்து ஆடை அணிய பெரும் போராட்டங்களையும் இழப்புகளையும் சந்திக்க வேண்டியிருந்தது.

நம் அப்பத்தாக்களை மேல் சட்டை அணிய வைக்கக் கடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மேல் சட்டை போட்டால் சாமி கண்ணைக் குத்திடும் என்றும் உடலில் கண்திருஷ்டி, தீயசக்தி அண்டாமலிருக்க குத்திக்கொண்ட பச்சை மறைந்துபோய்விடுமென்று கூறி பக்தியின் பெயரால் பறிக்கப்பட்ட ஆடை உரிமையை அரேபியாவில் நபி(ஸல்) அவர்கள் அதே பக்தியைக் கூறித்தான் முழுமையான ஆடை அணியவைத்தார்கள்.

ஆடை அணிவது தனிமனித உரிமை, சமூக அங்கீகாரம் என்பதைக் கடந்து அரசர்களும் அரசிகளும் அரச குடும்பத்து மக்கள் மட்டுமே மிதமிஞ்சிய ஆடைகளை அணிந்து கொள்ளமுடியும், சாதாரண மனிதன் உடையில் கூட ஏழையாக இருக்க வேண்டுமென்று பல்லாயிரம் ஆண்டுகளாகக் கற்பித்து வைக்கப்பட்டிருந்த ஓர் அடிமை மனப்பான்மையை உடைத்தெரிந்தது இஸ்லாமிய உடைகள் என்றால் அது மிகையில்லை.


HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com



# இமாம் ஷாமில்: ரஷ்யாவை நடுங்க வைத்த போராளி!

**- நாகூர் ரிஸ்வான்**

கபீப் இஸ்லாம் உட்பட இன்றைக்குப் பல Mixed Martial Arts போட்டியாளர்கள் தாகிஸ்தானைச் (Dagestan) சேர்ந்தவர்களாக இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் அந்த மலைப்பிரதேசம் நூற்றாண்டுகளாகவே வீரம் மிக்க போராளிகளை உருவாக்கிய பூமியாக இருந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா? அங்கு வாழ்ந்த போராளிகளுள் ஒரு குறிப்பிடத்தக்க நபரை நாம் எல்லாரும் நிச்சயம் அறிந்திருக்க வேண்டும்.

அவர்தான் இமாம் ஷாமில்(ரஹ்மத்துல்லாஹி அலைஹி). 25 ஆண்டுகளுக்கும் மேலாக உலகின் மிகப் பெரிய ரஷ்யப் பேரரசை எதிர்த்து நின்றவர். 1797ஆம் ஆண்டு பிறந்த இமாம் ஷாமில் உயரமான உடல்வாகு, அபார வலிமை, போர்த்திறன், குறிப்பாக இஸ்லாமிய அறிவில் சிறந்து விளங்கியவராக அறியப்பட்டார். சிரியாவில் இஸ்லாமியக் கல்வி கற்று, பிறகு காக்கஸ் மலைப்பகுதிக்குத் திரும்பினார். ரஷ்ய சாம்ராஜ்யத்திற்கு எதிராகப் போரிட வந்த ஷாமிலை வெகு சீக்கிரத்திலேயே ரஷ்யர்கள் ஆபத்தானவர் என்று உணர்ந்து கொண்டார்கள்.

கிம்ரி போரில் பலத்த காயமடைந்து சாகும் நிலைக்குச் சென்றவரை அல்லாஹ் காப்பாற்றினான். இரண்டு ஆண்டுகள் கழித்து முழு உடல் நலத்துடன் திரும்பிய இவர், 1834ஆம் ஆண்டு தாகிஸ்தான் மக்களின் இமாமாகவும், இராணுவத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிளவுபட்டுக் கிடந்த முஸ்லிம் பழங்குடிகளை ஒன்றிணைத்தார். ஒழுக்கம் மிக்க இஸ்லாமிய இராணுவத்தை உருவாக்கினார். சுதந்திரத்திற்கான நம்பிக்கையை மக்களிடத்தில் ஊட்டினார்.

அதன் பிறகு முழுக்க முழுக்க கொரில்லா போர் முறையில் ரஷ்யர்களை 25 ஆண்டுகளுக்கும் மேலாக நிலைகுலையச் செய்தார். தன்னிடம் இருந்ததை விடப் பல மடங்கு பெரிய ரஷ்யப் படைகளை மலைகளை ஆயுதமாக்கி எதிர்த்தார். துணிச்சலான தாக்குதல்களும், அசாத்திய உத்திகளும் ரஷ்ய தளபதிகளை திகைப்பில் ஆழ்த்தின.

இறுதியில் பெரும் எண்ணிக்கையிலான படைகளால் சூழப்பட்டு, குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகவே சரணடைந்தார். ரஷ்யர்கள் அவரை நாடு கடத்தினார்கள்.

சிறையிலிருந்து விடுதலையான பிறகு இமாம் ஷாமில் ஹஜ் செய்தார். 1871ஆம் ஆண்டு மதீனாவில் இறையடி சேர்ந்தார். நபித்தோழர்கள் பலர் அடக்கம் செய்யப்பட்ட ஜன்னத்துல் பகீ கபர்ஸ்தானில் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இதுதான் உலக வரலாற்றிலேயே மிக நீண்ட, மிகத் துணிச்சலான சுதந்திரப் போர்களில் ஒன்றை நடத்திய தாகிஸ்தான் சிங்கம் இமாம் ஷாமிலின் வரலாறு. அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்வானாக!

# அக்கரைப் பச்சை 35

• ஜரினா ஜமால்

திருநெல்வேலி பஸ் ஸ்டாண்டை அடைந்த போது மணி பன்னிரெண்டைத் தாண்டி விட்டது. இப்போது போல பழைய பஸ் ஸ்டாண்ட் புது பஸ் ஸ்டாண்ட் என்பதெல்லாம் அன்று கிடையாது. ஒரே பஸ் ஸ்டாண்ட் தான்.

கணபதி பஸ் நின்றிருந்தது.

'சித்திமா..! கணபதி பஸ் நிற்கிறான். இதை விட்டால் அடுத்த பஸ் மூணு மணிக்குத் தான்' சொல்லிக் கொண்டே பெட்டி, மூட்டை முடிச்சுகளுடன் பஸ்சுக்குள் ஏறி அமர்ந்தார்கள்.

'குடிக்க எதுவும் வாங்கித் தரவா?'

'சர்பந்து கிடச்சா வாங்கி வாம்மா! தல சுத்துது. வெயிலுக்குக் கண்ணை இருட்டுது' சித்திமா சொன்னதும் சாலிஹா வண்டியை விட்டு இறங்கி எதிர் கடையில், 'எலுமிச்சம்பழம் பிழிஞ்சு ஐஸ் போடாம ரண்டு நன்னாரி சர்பத் தாங்க' என்று கேட்டு வாங்கி கண்ணாடி கிளாஸை ஜன்னல் வழியாக சித்திமாவிடம் கொடுத்தாள்.

பஸ் புறப்பட்டது. மீண்டும் ஜன்னலோர இருக்கை. திருநெல்வேலி ஜங்ஷனில் இருந்து பாளையங்கோட்டை தாண்டியது பஸ். ஊருக்கு வந்து பத்து ஆண்டுகளுக்கும் மேல் ஆகி விட்டது. ஊரை நெருங்க நெருங்க நினைவுகள் பொங்கிப் பிரவாகித்தது.

திருமணம் முடித்து முதன்முதலாக வந்தபோது எல்லாமே புதிதாக இருந்தது. மதுரையும் நெல்லையும் நான்குமணி நேர பயண தூரத்தில் இருந்தாலும், உறவினர்கள் வந்து போய் இருந்தாலும் பேச்சும், பழக்கவழக்கங்களும் புதிதாக இருந்தது. சாலிஹா வெகுளியாக இருந்தாலும் கெட்டிக்காரியாக இருந்ததால் எல்லாமே கற்றுக்கொண்டாள்.

தொடக்கத்தில் விறகடுப்பில் பற்ற வைக்கச் சிரமப்பட்டாள். பிறகு புகை வராமல் வேலை செய்யப் பழகிக் கொண்டாள்.

'இதுதான் நான் படித்த பள்ளிக்கூடம் சாலிஹா' சல்மான் காதுக்கருகில் முணுமுணுப்பது போலிருந்தது. ஊருக்கு அழைத்துப் போகும் போது ஒரே சீட்டில் அமர்ந்து கொள்வான். 'கொஞ்சம் தள்ளித்தான் உக்காருங்களேன் மத்தவங்க பாக்கறாங்களே..' என்றால், 'ஏன் என் மனைவி பக்கத்தில் உட்கார மத்தவங்களுக்கு நான் ஏன் பயப்படணும்?' என்று கூறி இன்னும் நெருக்கமாக அமர்ந்து கொள்வான்.

'ஏர்வாடி பஸ் ஸ்டாண்ட் இறங்குங்கமா, இறங்குங்க..'

அதற்குள் ஊர் வந்துவிட்டதா? கொண்டு வந்த மூட்டை முடிச்சுகளை எல்லாம் இறக்கினாள். வண்டி புறப்பட்டது. கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள்.

'சாச்சிமா யாரையும் காணோமே?'

'முத்து வருவான். சொல்லி இருக்கேன் கொஞ்சம் ஒதுங்கி நிப்போம்'

அதற்குள் இரண்டு பேர் அடையாளம் கண்டு கொண்டு, 'சாலியாவா? சாச்சியா? நல்லா இருக்கீங்களா?' என்று கேட்டுப் போனார்கள். வேகவேகமாக முத்து வந்து கொண்டிருந்தான். இவர்களைக் கண்டதும் தலையில் சுற்றி இருந்த துண்டை உருவி தோளில் போட்டுக் கொண்டான்.

அருகில் வந்ததும் 'வாங்கம்மா! கொள்ளையத்த நாளாயிட்டு கண்டு.. சொகமா இருக்கியளா ?'

'நல்லா இருக்கோம் முத்து. நீ நல்லா இருக்கியா? உன் பொஞ்சாதி புள்ளங்களாம் நல்லா இருக்காங்களா?'

சாலிஹா ஊர் வந்து வெகு நாளாகிவிட்டது. சாச்சி அடிக்கடி வருகிறாள்.

'எல்லாமே நம்ம சாமாங்கதானேமா? தூக்கவாமா.? வண்டி கொண்டாரட்டுமா?'

‘வேண்டாம் முத்து! இன்னொருத்தர் யாரையாவது கூட்டி வா! காலாற நடந்தே வீட்டுக்குப் போகலாம்’

‘ஏமா.. இந்த வேணா பட்ட வெயில்ல நடக்கணும்ங்கறியே? தல சுத்துது சாலி யாமா! ஏறி உட்காரு வண்டில! ரொம்ப நாள் ஆயிருச்சு’

சித்திமாவின் வேண்டுகோளுக்கு இணங்க சாலிஹா வண்டியில் ஏறி அமர்ந் தாள். மாட்டு வண்டி நடுத்தெருவை நோக்கி ஓடியது. அவள் கற்பனைக் குதிரையும் ரெக்கை கட்டிப் பறந்தது.

‘மாப்பிள்ளை வாரார்
மாப்பிள்ளை வாரார்
மாட்டு வண்டியிலே
பொண்ணு வாரா
பொண்ணு வாரா
பொட்டு வண்டியிலே

புதுப் பொண்ணாக சாலிஹா குனிந்த தலையுடன், கன்னத்தில் கண்ணீர் வழிந்தோட அமர்ந்திருந்தாள். எதிர்த்தாற் போல சல்மான் சாலிஹாவையே பார்த்துக் கொண்டிருந்தான். முகம் சுளிக்காமல் மனைவி அழுவது அவனுக்கு அழகாக இருந்தது. இன்னும் ஒரு வார்த்தையும் பேசாத, கருத்துப் பரிமாறாத மனைவி. துடைத்துவிட கை துரு துருத்தது. அக்கம் பக்கம் பார்த்து அமைதி காத்தான்.

படக்கென்ற ஓசையில் வண்டி நின் றதை அறிந்து சாலிஹா தன்னிலைக்கு வந்தாள். வீட்டிற்குள்ளிருந்து ‘சாலி மாமி வந்தாச்சி’ என்று குரல் எழுந்தது.

‘அம்மா உள்ளாற போங்க! நான் ஜாமான்களை எடுத்து வாறேன்’

உள்ளே நுழைந்த சாலிஹாவை மச்சி (சல்மானின் சகோதரி) சேர்த்து அணைத் துக் கொண்டாள். அழுதார்கள். பிள்ளைகள் விசும்பினர். ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் சொல்லிக் கொண்டார்கள். வெகு நேரம் யாரும் பேசவில்லை.

முத்து செருமினான். ‘அம்மா நான் சாயந்திரம் வாரேன். செவ்விளநீ குலைகள் எல்லாம் வெட்டிப் போட்டிருக்கேன். வரும்போது எடுத்து வாரேன். வேற என்னமா வேணும்?’

‘ஒண்ணும் வேண்டாம் முத்து. நீ நாளைக்கு வா நிறைய வேலைகள் இருக்கு. நான் ஊர் போறத்துக்கு முன்னாடி சில ஜாமாங்க வாங்க வேண்டியிருக்கு...’

‘ஒண்ணாம் தெரு அனீஸ் பாத்திமா விடம் சாப்பாடு ஆர்டர் சொல்லலாம் என்று நினைச்சேன்..’

‘ஏன் மச்சி நாங்க இருக்கும் போது நீங்கள் வெளியில சாப்பாடு ஆர்டர்



போடணும். நானே எல்லாம் வீட்டில் இருந்து கொண்டு வந்துட்டேன்’

சிறிது நேரம் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். மச்சியின் இரண்டு மகள்களுக்குத் திருமணம் முடிந்திருந்தது. பிள்ளைகளின் திருமணத்திற்கு வந்தது. அவதி அவதியாகப் போய்ட்டீங்க. இங்க உங்கள வெச்சு நிறைய காரியம் ஆக வேண்டி இருக்கு.. சாப்பிட்டு ரெஸ்ட் எடுத்துட்டு அப்றம் பேசுவோம்’

நீண்ட நாளைக்குப் பிறகு வீட்டில் பாய் விரித்துப் படுத்தாள் சாலிஹா. நினைவுப் பறவை சிறகை விரித்துப் பறந்தது.

- தொடரும்

# சமரசம் புதிர் போட்டி 7

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 ஏப்ரல் 15 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அனுப்பவும்.

1. '(நபியே!) நீர் கூறுவீராக: 'அல்லாஹ்வே! ஆட்சியதிகாரம் அனைத்திற்கும் அதிபதியே! நீ நாடுகின்றவர்களுக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய். மேலும், நீ நாடுகின்றவர்களிடமிருந்து ஆட்சியைப் பறிக்கின்றாய். நீ நாடுகின்றவர்களுக்குக் கண்ணியத்தை வழங்குகின்றாய். மேலும், நீ நாடுகின்றவர்களை இழிவுபடுத்துகின்றாய்' இந்த வசனம் இடம்பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அல்மாயிதா ஆ) ஆலு இம்ரான்

2. ஜின்கள் எந்த நபிக்காக உயர்ந்த மாளிகைகளையும், தடாகத்தையொத்த தட்டுகளையும், அண்டாக்களையும் உருவாக்கின.

   அ) நபி தாவூத்(அலை)
   ஆ) நபி ஸுலைமான்(அலை)

3. கால்நடையிலிருந்து கிடைக்கும் வருவாய்க்கு ஜகாத் வசூலிப்பவர்கள்

   அ) ஆமீலின்அலல் ஹமாஅ
   ஆ) உம்மால் அஸ்ஸதகாத்

4. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உருவாக்கிய ஆன்மிகத் தலைவர்களுக்கான அமைப்பு

   அ) தார்மிக் ஜன்மோர்சா
   ஆ) சத்பாவனா மன்ஞ்

5. ஈரானின் உயர் தலைவர் ஷஹீத் கமேனி உருவாக்கிய இராணுவப் படையின் பெயர்

   அ) ரகசியக் காவல் படை(SAVAK)
   ஆ) இஸ்லாமிய புரட்சிகர காவலர்படை(IRGC)

6. இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர்

   அ) ஞானேஷ் குமார் ஆ) சத்யபிரதசாஹு

7. உலகில் உள்ள பறவைகளில் மிகப் பெரியது எது?

   அ) தீக்கோழி ஆ) மயில்

8. வாழும் காலத்திலேயே தமது நூல்கள் நாட்டுடமையாக்கப்பட்ட புதிய வரலாறு படைத்த வரலாற்றாய்வாளர்

   அ) அ.ராசா முஹம்மது ஆ) செ.திவான்

9. மரத்தின் கிளைகளிலிருந்து வேர்களைத் தோற்றுவிக்கும் தாவரம் ?

   அ) அரசமரம் ஆ) ஆலமரம்

10. கச்சா எண்ணெய் போக்குவரத்திற்கு வழியாகத் திகழும் ஈரானுக்கு அருகில் உள்ள நீர் வழிப்பாதை

    அ) ஹார்முஸ் நீர் வழிப்பாதை
    ஆ) ஜிப்ரால்டர் நீர் வழிப்பாதை

## புதிர் போட்டி ஐந்திற்கான விடைகள்

1. (ஆ) அல்பகரா 2.(ஆ) ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்(ரலி) 3.(அ)ரய்யான் 4. (அ) அபுல் கலாம் ஆசாத் 5. (அ) அப்லா அல் கஹ்லாவி 6.(அ) ஷேக் முஹம்மத் காரக் குன்னு 7.(ஆ) கல்கோடியாஸ் பல்கலைக் கழகம் 8.(அ) இஸ்ஸத்தீன் அல் கஸ்ஸாம்

**சரியான விடையை எழுதியவர்கள்:**

1. ஜன்னத்துல் பிர்தௌஸ், துளசேந்திரபுரம் 2. P.A. சமீஹா, கடையநல்லூர் 3. H.S. ஹமீது, கொரக்கவாடி 4. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 5.பாலா ஆமினத், சிக்கல் 6. ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம்.

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

ஸ்ரீமதி,
மஞ்சக்குப்பம்

# நோன்பு கேடயமே!

● கவிஞர் காசீம்

எதிரியின் தாக்குதலைத்
தடுப்பது கேடயமே!
எதிரி யார்? சைத்தானே!
எங்கே எதிரி? மனிதருக்குள்ளே

பார்வையிலே சைத்தானே!
பொய், புறம், கடுஞ்சொல்லிலே சைத்தானே
நம்மைத் தாக்காமல்
காக்கும் நோன்பு கேடயமே
உண்ணல், பருகல், இச்சை நோக்கில்
நோன்பு கேடயமே!

வம்பு தும்புக்குப் போகாமலே
வந்த வம்பை விட்டு விலகியே
காக்கும் நோன்பு கேடயமே

ஐம்பொறிகளின் ஆட்சியை
அல்லாஹ்வின் அச்சத்தாலே
அடக்கிக் கொள்ளும்
நோன்பு கேடயமே

மனோவலிமை உறுதி ஏற்று
நற்செயல்களில் வெற்றி பெற
நோன்பு கேடயமே!



## சித்திரம் பேசுது..!



யஹ்யா,
இரண்டாம் வகுப்பு
Stanes ICSE school
கோயம்புத்தூர்




J. ஆமினா பீபிஜான்
11ஆம் வகுப்பு
இஸ்லாமியா மெட்ரிக் குலேஷன்
மேல்நிலைப் பள்ளி, கோவை


# என்ன வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் கூறினார்: 'எல்லாமே எங்களுக்குச் சாதகமாக இருந்தன. ஆனால் இறைவன் கொமேனியின் பக்கம் இருந்தார்'.



இன்று அதை விட மோசமான நிலைமைக்கு அமெரிக்கா ஆளாகியிருக்கின்றது. அமெரிக்காவிடம் மிகப் பெரும் இராணுவம், அதிநவீன விமானங்கள், வகைவகையான விமானம் தாங்கிக் கப்பல்கள், ராடார்கள் என எல்லாமே இருந்தும் எதுவுமே அதற்குச் சாதகமாக இல்லை.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதுதான் இலக்கு என்றார் ட்ரம்ப். கமேனி உட்பட 48 முக்கியத் தலைவர்களை, தளபதிகளைக் குறி வைத்துக் கொன்றார். அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவார்கள்; ஆட்சி மாற்றம் நிகழும் என்று ட்ரம்ப் போட்ட கணக்கு தப்புக் கணக்கு ஆனது. கமேனிக்குப் பதிலாக அவருடைய மகனார் முஜ்தபா கமேனி பொறுப்பேற்றார். மக்களோ அரசுக்கு ஆதரவாக ஒன்றிணைந்தார்கள். எல்லா வகையான இழப்புகளுக்கும் ஆயத்தமாகி விட்டார்கள்.




ஃபலஸ்தீனுக்கு ஆதரவாக ரமளானின் இறுதி வெள்ளிக் கிழமையை குத்ஸ் தினமாக 1980களிலிருந்து கடைப்பிடித்து வருகின்ற குத்ஸ் நாளின் போது நாடு முழுக்க ஈரானியர்கள் இலட்சக்கணக்கில் திரண்டு நடத்திய எழுச்சிப் பேரணிகள் உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்துவிட்டன. அந்தப் பேரணிகளில் ஈரானிய அரசுத் தலைவர்களும் பங்கேற்றார்கள். மக்கள் ஆதரவு அரசாங்கத்தின் பக்கம்தான் என்பதை உணர்த்திய நிகழ்வுகள்தாம் அவை.




அதிநவீனமான, அதி வேகமான, உலகத்தின் எந்தவொரு ரேடார் கண்களிலும் சிக்காத, மணிக்கு 1200 மைல் வேகத்தில் பறக்கின்ற, 100 மில்லியன் டாலர் (940 கோடி ரூபாய்) மதிப்புள்ள விமானங்களாக அமெரிக்காவின் பெருமையாகக் கொண்டாடப்படுகின்ற F35 ரக போர் விமானம் ஒன்றை ஈரானியர்கள் சுட்டுவிட, நிலைகுலைந்து போன விமானிகள் அருகில் இருந்த விமானத் தளத்தில் அவசர அவசரமாகத் தரையிறக்க, அதிர்ந்து நின்றது அமெரிக்கா!

இஸ்ஃபஹான் நகரத்தில் ஒரு தள்ளுவண்டி வியாபாரி 'இங்கு F35 விமான உதிரி பாகங்கள் விலைக்கு வாங்கப்படும்' என்று எழுதி வைத்து மக்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றார். வீதிதோறும் சுவர்களில் இந்த அறிவிப்புதான் நிறைந்திருக்கின்றது.



ஈரானில் சூப்பர் மார்க்கெட் ஒன்றில், 'உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். பணம் தர வேண்டியதில்லை. நம் மீது திணிக்கப்பட்டுள்ள போர் முடிந்ததும் திருப்பித் தந்தால் போதும்' என்று எழுதி வைத்திருக்கின்றார்கள்.

போருக்கு நடுவே நகைச்சுவையும், மனித நேயமும் மிளிரும் இச்செய்திகள் மூலமாக உலகிற்கு மிகப் பெரும் வெற்றிச் செய்தியைத் தந்து கொண்டிருக்கின்றது ஈரான்.

**– டி. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT
# TO PAY & COD
# BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 01 - 15 April 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

Anywhere - Anytime

- Domestic
- International
- Cargo



Send your documents & Parcels through

THE PROFESSIONAL COURIERS

Pro premium a professional service › DOMESTIC › INTERNATIONAL › CARGO

**BUSINESS ENQUIRY :**
No.32, Thiru-Vi-Ka Salai,
Royapettah, Chennai-600014.
Phone: 044-4555 3222
E-Mail: maaro-mkt@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

**SERVICE ENQUIRY :**
No.17, Cathedral Garden Road,
Nungambakkam, Chennai-600034.
Phone: 044-6620 2020
E-Mail: maaro@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com



If undelivered, please return to : Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.